# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 09 சனிக்கிழமை (24-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:242


# இடைக்காலத் தன்னாட்சி இன்றேல்

# சுதந்திரத் தனி ஆட்சியே அமையும்

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒன்று கூடித் தீர்மானம்

கொழும்பு,ஜூலை24

**இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபை வழங்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் வெற்றி தமிழத் தேசியத்திற்கே. அரசு தானாக வழங்கினால் அது இடைக்காலத் தன்னாட்சி நிர்வாக சபையாக இருக்கும். இல்லையேல் சுதந்திரத் தனி ஆட்சியாக அது அமையும்.**

**"இவ்விடயத்தில் வடக்கு-கிழக்கு மாகாண மக்களிடமோ அரசியல்வாதிகளிடமோ எந்த வகையான மாற்றுக்கருத்துக்களோ பிரதேச முரண்பாடுகளோ இல்லை.**

**"தமிழ்த் தேசியம் ஒன்றை உருவாக்குவதற்காக என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கின்றோம்.**

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடக்கு - கிழக்கு மாகாண எம்.பிக்கள் அனைவரும் ஒரே குரலில் இவ்வாறு சூளுரைத்தனர்.**

நேற்றுக்காலை நாடாளுமன்றக் குழு அறையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் கூட்டாக இந்தக் கருத்தைக் வெளியிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி உறுப்பினர்களான தங்கேஸ்வரி கதிர்காமநாதன், அரியநேந்திரன், ஜோசப் பரராஜசிங்கம், ஜெயானந்தமூர்த்தி, கனகசபை பத்மநாதன், திருகோணமலை மாவட்ட எம்.பியான துரைரட்ணசிங்கம் ஆகியோருடன் யாழ். மற்றும் வன்னி மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அரச பயங்கரவாதிகளுடன் இணைந்து சில தமிழ்த் துரோகக் கும்பல்கள் பிரதேசவாதத்தைத் தூண்டிவிட்டுத் தமிழ் தேசியத்திற்கு வேட்டுவைக்க முனைந்தன.

ஆனால், கிழக்கு மக்கள் ஒட்டு மொத்தமாகப் பிரதேசவாதத்தைச் சுட்டுப் பொசுக்கி சாம்பராக்கிவிட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை 8 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை24

நேற்று நள்ளிரவுமுதல் பெற்றோலின் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருக்கிறது.

எனினும், ஏனைய எரிபொருள்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் சாலியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதன்படி இதுவரை லீற்றர் 57 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுவந்த பெற்றோல் புதிய விலையின்படி 65 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும். (எ-4-7)

## புலிகள்-படையினர் திருமலையில் சந்திப்பு

திருகோணமலை,ஜூலை24

திருகோணமலை மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். எழிலன் ஆகியோர் நேற்றுப் பகல் திருகோணமலையில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிமனையில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த மார்க்கிரட்டாவும் கலந்துகொண்டார். சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமுகமான முறையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் சகல சமூகங்களிடையில் அண்மைக்காலமாக சுமுக நிலை நிலவிவருவதாகவும் இதனைப் பேணிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# அரசுப் பக்கம் பாய்வதற்கு இ.தொ. காங்கிரஸ் தயார்!

### அணிதாவ இரு அமைச்சுக்கள் பரிசு

கொழும்பு,ஜூலை24

அரசுப் பக்கம் பாய்வதற்கு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் அரசுத் தரப்பினரோடு நடத்தி வந்த பேரம் இதுவரை இழுபறிப்பட்டு வந்தது. இப்போது பேரம் படிந்துவிட்டது.

பரிசாக இரண்டு முக்கிய அமைச்சுக்களைப் பெற்றுக்கொண்டு அணிதாவுவதற்கு இ.தொ.கா. தலைவர்கள் இணங்கிவிட்டார்கள் என்று நம்பகரமாக அறியவந்துள்ளது.

இ.தொ.கா. தலைவர்களுக்கும் அரசுப் பிரமுகர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு இரகசியமாக இடம்பெற்ற ஒரு சந்திப்பை அடுத்தே பேரம்படிந்ததாகக் கூறப்பட்டது.

இ.தொ.காவுக்கு முக்கிய இரண்டு அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கினார் என்று தெரிகின்றது.

இதனையடுத்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபிக்க அரசு எடுக்கும் முயற்சிக்கு ஆதரவு தர இ.தொ.கா. சம்மதித்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை நீக்க தமிழ்நாட்டு மக்கள் ஆதரவு

### கருத்துக்கணிப்பில் தெரிவிப்பு

சென்னை,ஜூலை24

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கவேண்டும் என்ற பொதுஜன அபிப்பிராயமே தமிழ்நாட்டில் மேலோங்கிநிற்கிறது.

சென்னையில் உள்ள லொயோலாக் கல்லூரி இந்தியப் பொதுத் தேர்தல்களை அடுத்து நடத்திய கருத்துக்கணிப்பில் இவ்விவரம் தெரியவந்துள்ளது.

புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்று 54.2 வீத பொதுமக்களும், தடையை நீக்கக் கூடாது என்று 45.8 வீதமானோரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்திய அரசியலில் பிந்திய நிலைவரத்தையும், வேறுசில அரசியல் சட்ட விவகாரங்கள் பற்றியும் மக்களின் எண்ணங்களை அறியும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆதரவாளர் நேற்று கதிரவெளியில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஜூலை24

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கதிரவெளியில் இருந்து வாகரை, கட்டுமுறிவு என்னும் இடத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சீனித்தம்பி மகாலிங்கம் (வயது-28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கதிரவெளி, புளியங்கண்டலடியில் பதுங்கியிருந்த இனந்தெரியாதவர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைக் கண்டித்து விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கறுப்புப்பூனைப் படையின் விசேட பயிற்சி இலங்கைப் படைக்கு!

கொழும்பு,ஜூலை24

இலங்கையில் அதிமுக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் படையினருக்கு இந்தியாவின் கறுப்புப்பூனைப் படை பயிற்சி வழங்க முன்வந்துள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கு அமையவே இந்தியப் படையினர் பயிற்சி வழங்க முன்வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு, பிரதமர் பாதுகாப்புப் பிரிவு, அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவு போன்றவற்றில் பணிபுரியும் - விசேட பயிற்சியளிக்கப்பட்ட - படையினருக்கே மேலதிகமான பயிற்சிகள் வழங்கப்படும். இதற்காகக் கறுப்புப் பூனைப்படையினரின் பயிற்சி அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர். இந்தியாவின் சிறப்புப் படைப் பிரிவில் உள்ள கொமாண்டோ அணியே கறுப்புப் பூனைப்படை ஆகும். (16ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய தினம் கடைகளைப் பூட்டி துக்கதினத்திற்கு ஆதரவு வழங்குக

### வர்த்தகர்களிடம் சம்மேளனம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு நாளை அனுஷ்டிக்கப்படவிருக்கும் துக்க தினத்திற்கு பூரண ஆதரவு வழங்குமாறு சகல வர்த்தகர்களையும் யாழ். மாவட்ட வர்த்தக சங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது.

கறுப்பு ஜூலை தினம் தொடர்பாக சம்மேளனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென்னிலங்கை ஆட்சியாளர்களினால் தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுத், தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் வகை தொகையின்றி அழித்தொழித்து இலங்கை மண்ணில் காட்டுமிராண்டித் தனச் செயல்புரிந்த கறுப்பு ஜூலை தினமான 1983 ஜூலை 25ஆம் தினத்தை தமிழ் மக்களால் மறக்கமுடியாது.

ஆகவே, இந்த இருண்ட நாளாகிய கறுப்பு ஜூலை ஞாயிறு 25ஆம் நாளில் குடாநாட்டில் உள்ள சகல வர்த்தகர்களும் தமது வர்த்தக

(16ஆம் பக்கம் பார்க்க)

## வங்கி ஊழியர் கடத்தப்பட்டாரா?

மானிப்பாய் மக்கள் வங்கியின் காசாளர் வீடு செல்லும் வழியில் கடத்தப்பட்டு அவரிடம் இருந்த திறப்புக் கோர்வை மூலம் வங்கி திறக்கப்பட்டுள்ளது.


எனினும், வங்கியில் இருந்து நகைகளோ, அன்றி பணமோ திருடப்படவில்லை.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மானிப்பாய் பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த மக்கள் வங்கியின் காசாளர் வங்கி அலுவல்களை முடித்துக்கொண்டு அராலியில் உள்ள அவரது இல்லத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது திறப்புக் கோர்வையுடன் விஷமிகளால் கடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிய

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



லெப். செல்லக்கிளி அம்மானின் 21 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுக் குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன. திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மானின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பொதுமக்கள் மற்றும் போராளிகள் தூபிக்கு மலரஞ்சலி செலுத்துவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலைய முன்றிலில் மாலையில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மனன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, செல்லக்கிளி அம்மானின் சகோதரரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ச.கனகரட்ணம் ஆகியோர் அமர்ந்திருப்பதை இறுதியாக உள்ள படத்திலும் காணலாம். *(படங்கள் : கவிதரன்)*

# செல்லக்கிளி அம்மானின் நினைவு தினம் குடாநாட்டில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை24

லெப். செல்லக்கிளி அம்மானின் 21ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் செல்லக்கிளி வீரச்சாவடைந்த இடமான திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் உள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் சி.தேவராசா, யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் இ.இராஜரட்ணம், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அன்ரனிராஜா ஆகியோர் ஏற்றினார்கள்.

நினைவுத் தூபிக்கான மலர் மாலைகளை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் குகன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஆகியோர் அணிவித்தனர்.

மாணவர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர். செம்மணன் சிறப்புரையாற்றினார்.

மாலை நிகழ்வுகள் நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலைய முன்றிலில் சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் நடைபெற்றன.

கவிஞர் புலேந்திரராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை செல்லக்கிளியின் சகோதரரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ச.கனகரட்ணம், உறவினர் சோ.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்படப் பலர் உரையாற்றினர்.

காவடி ஆட்டம், பட்டிமன்றம் மற்றும் பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

(எ-4-13-30-86)

# மேல் மற்றும் மத்திய மாகாண அமைச்சர்கள் நேற்று பதவியேற்பு

கொழும்பு,ஜுலை24

மேல் மற்றும் மத்திய மாகாணங்களின் புதிய அமைச்சர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

மேல்மாகாண சபைக்கான ஐந்து அமைச்சர்கள், ஆளுநர் அலவி மௌலான முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தனர்.

முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே - மாகாண நிதி, கொள்கைத்திட்டமிடல், நீதி, கல்வி, போக்குவரத்து மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகவும், பிரசன்ன ரணதுங்க - சுகாதார, சமூக நலன்புரி, சுற்றாடல், சிறுவர் பாதுகாப்பு அமைச்சராகவும், ஹெக்ட ஹேரத் - காணி, விவசாயம், நீர்ப்பாசன மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும், துலிப் விஜேசேகர - மின்சாரம், வதி, கூட்டுறவு அமைச்சராகவும், காமினி திலகசிறி - விளையாட்டு, இளைஞர் விவகார மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

மத்திய மாகாண அமைச்சர்கள், ஆளுநர் மெண்டிஸ் கொபல்லாவ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

கல்வி, நீதி, நிதித்திட்டமிடல், இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம், கிராம அபிவிருத்தி, மீன்பிடி, விளையாட்டுத்துறை, போக்குவரத்து அமைச்சராக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும், தேசிய வைத்தியத்துறை, சுகாதாரம், சிறுவர் பாதுகாப்பு, சமூக சேவை அமைச்சராக சம்பிக்க விஜயரட்ணவும், காணி, விவசாய, நீர்ப்பாசன, கால்நடை அபிவிருத்தி அமைச்சராகவும் ஜயரட்ண திஸாநாயக்கவும், கூட்டுறவு, மின்சக்தி, நெடுஞ்சாலை அமைச்சராக எதிரி வீரவர்த்தனவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதேவேளை, வெற்றிடமாக இருக்கின்ற மற்றுமோர் அமைச்சர் பதவி சிறுபான்மை இனத்தவர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## முல்லை மீனவர் தாக்கப்பட்டனர்

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடற்படையினரால் தாக்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு, வண்ணாங்குளத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற சுமன், பிரபாகரன் ஆகிய இருவருமே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலைக் கண்டித்து முல்லைத்தீவு கடற்றொழில் சங்கங்களின் சமாசம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

# தமிழ்த் தேசியக் கோட்பாட்டில் தங்கேஸ்வரி எம்.பி. உறுதி!

## துரோகி கருணாவுக்கு துணைபோகவில்லையாம்

கொழும்பு,ஜுலை24

"நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கோட்பாட்டைக் கைவிடவும் இல்லை. தமிழ்த் தேசியத் துரோகி கருணாவின் கட்டுப்பாட்டிற்குள்ளும் இல்லை. அன்றும் இன்றும் என்றும் வடக்கும் - கிழக்கும் இணைந்த தமிழ்த் தேசியம் உருவாகவேண்டும் என்பதே எமது லட்சியம்" என்று கூறுகின்றார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான தங்கேஸ்வரி கதிர்காமநாதன்.

நேற்று நாடாளுமன்றக் குழு வளவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இப்படிக் கூறினார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள், தலைவர் பிரபாகரன் தலைமையில் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த் தேசியக் கோட்பாட்டை முன்வைத்தே தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

"ஆனால், தேர்தல் முடிந்தபின் இதைப்பற்றி அவர்கள் எதுவுமே பேசுவதில்லை. குறிப்பாகத் தங்கேஸ்வரி எம்.பி. கலந்துகொள்ளும் எல்லாக் கூட்டங்களிலும் வெறும் அபிவிருத்தி தொடர்பாக மட்டுமே அவர் பேசுகின்றார். தமிழ்த் தேசியம் பற்றி எதுவும் மூச்சுவிடுவதில்லை. அவர் கருணாவின் கட்டுப்பாட்டிலேயே செயற்படுகிறார் எனப் பேச்சடிபடுகிறது. தமது நிலையை அவர் தெளிவுபடுத்துவாரா?" - எனச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"இத்தகவல் பிழையானது. உங்களுக்குத் தவறான தகவல்கள் கிடைத்துள்ளன. வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த் தேசிய உணர்வுக்கு வித்திட்டதே மட்டக்களப்பு மாவட்டம்தான்.

மாவீரர்களையும் கடற்புலிகளையும் உருவாக்கியது எங்கள் மாவட்டம்.

ஆதி திராவிடர், நாகர்கள் காலம் முதல் தமிழ்த் தேசியக் கோட்பாடு இங்குண்டு. இதை மாற்றமுடியாது.

என்னைத் தெரிவுசெய்து இங்கு அனுப்பிய மக்களுக்காகச் சேவை செய்யவேண்டியது எனது கடமை. அதற்காக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகப் பேசுவதில் தவறு ஒன்றும் இல்லை. அதனால், நான் தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டுவிட்டேன் என்றோ கருணாவுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகின்றேன் என்றோ கூறுவது தவறானது.

- இப்படித் தங்கேஸ்வரி எம்.பி. உறுதியாகக் கூறினார்.

## சுகாதார ஊழியர் பணி நிறுத்தம்

மத்திய மாகாண சுகாதாரத்துறை ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பேராதனை வைத்தியசாலையின் ஊழியர் சங்கத் தலைவர் ஒருவர் நீதியற்ற முறையில் இடமாற்றம் செய்யப்பட்டார் எனத் தெரிவித்து அதைக் கண்டித்து பேராதனை வைத்திய ஊழியர்கள் மேற்கொண்டுவரும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் மற்றும் இரு கோரிக்கைகளை முன்வைத்தும் இவ்வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஈ.பி.டி.பியினருக்கும் கிழக்கில் பாதுகாப்பு

கிழக்கு மாகாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றில் கடந்த புதன்கிழமை ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர் கமலநாதன் (ரவீந்திரன்) சுட்டுக்கொலைப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

அத்துடன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை, அம்பாறை - தலயந்தலாவ விகாரை மீதான குண்டுத்தாக்குதலுடன் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதாகவும் அதற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

(க)

# புற்றுநோய் வைத்தியசாலை செப்ரெம்பர் முதல் இயங்கும்

## செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜுலை24

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் மீண்டும் இயங்கச் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், படை அதிகாரிகள், யாழ். சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக புற்றுநோய் சிகிச்சை மற்றும் 'கோபால்ட்' பிரிவையும் ஒரு வார்ட்டையும் இயக்குவது என்றும் -

இந்தப் புற்றுநோய் வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையைப் புனரமைத்து அதனை இயங்கச் செய்வது என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

(4-6)

# பலாலி யாகப்பர் தேவாலயத்தில் திருவிழா நடத்துவதற்கு அனுமதி

கொழும்புத்துறை,ஜுலை24

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியல் அமைந்துள்ள வசாவிளான் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழாவைக் கொண்டாட படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருவிழாக் கூட்டுத்திருப்பலியை நிறைவேற்ற பங்குத்தந்தை அருட்திரு. ஜோதிநாதன் அடிகள் ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

மேற்படி தேவாலயங்களில் இருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. திருவிழாவில் பங்குகொள்ள விரும்பும் பக்தாகளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் முன்பாகவும், பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்திலும் ஒன்று கூடுமாறு பங்குத் தந்தை கேட்டுள்ளார்.

(எ-30)

# தமிழகத்தில் இருந்த இருபது பேர் நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் தங்கியிருந்த 20 ஈழத் தமிழர்கள் நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிப் படகுகளில் புறப்பட்ட இவர்கள் தலைமன்னாரில் இலங்கைக் கடற்படையினரிடம் சரணடைந்தனர்.

தமிழ் நாட்டின் கரூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வசித்து வந்த ஈழத்தமிழர்களே தாயகம் திரும்பியுள்ளனர்.

பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா அனுமதி அளித்தார்.

கிளிநொச்சி மாவட்டம் செல்வாநகர், ஜெயபுரம், லக்சபானா ஆகிய பகுதிகளையும், திருகோணமலை மாவட்டம் கும்புறுப்பிட்டி, உப்புவெளி ஆகிய பகுதிகளையும் சேர்ந்த இவர்கள், மன்னார், நகர கிராம அலுவலர் ஊடாக சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

(க)

# உதயன்

## போக்கிடம் தெரியாப் போக்கு

இலங்கை விடயத்தில் தனது ஈடுபாட்டை மீண்டும் தீவிரப்படுத்துவதற்கு இந்தியா தயாராகி இருக்கின்றது எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை அதன் அயலில் உள்ள சிறிய தீபகற்பம் இலங்கை. நம்நாட்டின் புவியியல் அமைவிடம் இந்தியாவைப் பொறுத்தவரை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தானமாகும்.

இங்கு நிலவும் சிக்கல் நிறைந்த பாதுகாப்பு நிலைமைகள் மட்டும் இந்தியாவின் இந்தப் புதுமுடிவுக்குக் காரணம் அல்ல என்றும் -

இத்தீவின் மீது அமெரிக்கா மற்றும் பாகிஸ்தானின் அதிகரித்து வரும் செல்வாக்கை முறியடித்துத் தனது பிராந்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதும் இந்தியாவின் நோக்கங்களுள் முக்கியமானது என்றும் - தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்திய உபகண்டப் பிராந்தியத்தில் அதன் வல்லாதிக்க சக்தியை எவரும் மறுத்துரைக்கமுடியாது. அதைத் தக்க வைத்துக்கொள்ளவும் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ஆக்கபூர்வமான - பயனுள்ள - முன்னெச்சரிக்கையான - தந்திரோபாய ஏற்பாடுகளை இந்தியா செய்துகொள்வதைத் தப்பு என்று யாரும் கூறமுடியாது. இப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுக்கு, ஏனைய தேசியங்களுக்கு, ஏனைய இனங்களுக்கு அவை இடையூறு தருவனவாக இருந்தாலும்கூட அத்தகைய நடவடிக்கைகளை இந்தியா எடுப்பதை நியாயமற்றது என்றும் இலகுவாகக் கூறிவிடமுடியாது.

ஆனால், இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு நல்ல முன்அனுபவம் உண்டு. அதைப் 'பட்டறிவு' என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும். அந்த அனுபவப் பாடம் உணர்த்திய நிலைப்பாடுகளை இந்தியாவின் முன்னைய அரசுகள் நன்கு புரிந்துகொண்டமையால்தான் இலங்கை விடயத்தில் பட்டும்படாமலும் - முட்டியும்முட்டாமலும் - செயற்படும் கொள்கையை அவை கடைப்பிடித்து வந்தன. கடந்த ஒரு தசாப்த காலமாக அந்த நிலைமைதான் நீடித்துவந்தது.

ஆனால், இந்திய அரசின் இந்தப் போக்கின் பின்னணியை நன்கு உணர்ந்துகொண்ட இலங்கை அரசு, தனது உள்நாட்டு பிரச்சினையில் தனக்குச் சார்பாக இந்திய உதவிகளைப் பெறுவதற்கு வழிசெய்யும் திட்டம் ஒன்றுக்கான வலையை விரித்தது. அதில் வீழுவதற்கு இந்தியா தயாராகிவிட்டது என்பதுதான் புதிய இந்திய அரசின் நிலைப்பாட்டிலிருந்து இப்போது தெளிவாகியிருக்கின்றது.

தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடி வரும் ஈழத்தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்கு இந்தியாவின் பக்கபலத்தை எப்படியும் பெற்றாக வேண்டும் என்று கங்கணம் கட்டிய இலங்கை அரசியல் மற்றும் அதிகார வர்க்கம், அதற்கு வகுத்த குள்ளநரித் திட்டம்தான் இலங்கை விடயத்தில் பிறசக்திகளின் தலையீடு என்ற பூச்சாண்டி.

இந்தியாவின் தென்முனையில் உள்ள இந்த சிறிய தீபகற்பத்தில் அமெரிக்க, பாகிஸ்தான் தலையீடுகளுக்கு - செல்வாக்குக்கு - வெற்றிலை வைப்பதன் மூலம், இந்தியாவைக் கிறங்கடிக்கச் செய்து, தன் வழிக்கு அந்த நாட்டை வரவழைப்பதுதான் இலங்கைத் தரப்பின் தந்திரோபாயம்.

இந்த இராஜதந்திரம் இலங்கைக்குப் பயன் - பலன் - கொடுக்கப்போகின்றது என்பதுதான் இலங்கைத் தலைமையின் நம்பிக்கை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது அங்கு அவருக்குக் காட்டப்பட்ட சமிக்ஞைகள் இலங்கைத் தரப்புக்கு இந்த நம்பிக்கையைத் தந்திருக்கின்றன என்கின்றார்கள் அரசியல் அவதானிகள்.

அரசியல் இராஜதந்திரத்தில் 'கிழட்டு நரி' என்று வர்ணிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இதேபோன்ற தந்திரோபாயத்தைத்தான் கையாண்டார். அவரது 'பாச்சா' முன்னாள் இந்தியப் பிரதமரும், தேர்ந்த அனுபவசாலியுமான இந்திராகாந்தியிடம் பலிக்கவில்லை. ஆனால், அரசியல் அனுபவத்தில் கற்றுக்குட்டி நிலையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற மகன் ராஜீவ்காந்தியிடம் பலித்தது. அவர் பலியானார்.

ராஜீவைச் சூழ இருந்த 'அதிபுத்திசாலிகள்' தாங்கள் ஜே.ஆர்.விரித்த வலையில் ராஜீவை மாட்டுகின்றோம் என்பதைப் புரியாமலேயே, ராஜீவின் - இந்தியாவின் - செல்வாக்குக்கு ஜே.ஆரையும், அவரது இலங்கையையும் அடிபணிய வைக்கின்றோம் என்ற மமதையோடு விடயங்களை முன்னெடுத்தனர்.

விளைவு...?

இந்தியப்படை 'வெறுங்கையோடு இந்தியா புக்கான்' என்ற நிலையில் திரும்ப வேண்டியதாயிற்று.

ராஜீவைப் பிழையாக வழிநடத்திய அதே 'அதிபுத்திசாலிகள்' இப்போது மன்மோகன்சிங் அரசையும் இலங்கை வலைக்குள் தலைகுப்புற வீழ்த்துவதற்கான திசையில் வழிநடத்தத் தயாராகிவிட்டார்கள் என்பதைத்தான் இப்போதைய போக்குக் காட்டுகின்றது.

ஏற்கனவே படித்த பாடம் இந்தியாவுக்குப் புரியாதது பெரும் வேதனையே.

### சென்னைப் பல்கலைக்கழகத்தில்

# ஈழத்தமிழர் மரபுகளையும் மாணவர் கற்கும் வாய்ப்புண்டு

## பேராசிரியர் அரசு தகவல்



யாழ்ப்பாணம்,ஜூலை24

ஈழத்தமிழர்கள் பற்றியும் அவர்களின் ஈழ மரபு தொடர்பாகவும் சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் அறிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் கற்கைநெறியில் ஓர் அம்சமாக இந்த விடயமும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் வி.அரசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தமிழ்ப் புனைகதை உருவாக்க வரலாறும் தமிழ் அச்சு ஊடகமும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் அவர் பேசுகையில் மேலும் [illegible]வது:-

சமூகத்தில் ஊடகத்துறை முதன்மையான - முக்கியமான - இடத்தை இன்று வகிக்கின்றது. உளவியலுடனும் சமூகத்துடனும் பின்னிப்பிணைந்துள்ள ஊடகத்துறை பரந்துபட்டு வளர்ந்துள்ளது.

தமிழகத்தில் 1835ஆம் ஆண்டுக்கு முன் அச்சு இயந்திரங்கள் - அச்சிடும் தொழில் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1835இல் சகலரும் அச்சு இயந்திரங்களைப் பாவிக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்பின் அச்சுக்கலை வளரத் தொடங்கியது. வணிகக் கருவியாக அச்சு இயந்திரங்கள் மாற்றம் பெற்றன.

1980இல் தமிழ்நாட்டில் தொலைக்காட்சிகள் தனியார்மயமாக்கப்பட்டன. அதன் பின் தொலைக்காட்சி நிலையங்கள் பெருகத்தொடங்கின.

தொலைக்காட்சியை வைத்து வாக்கு வேட்டை நடத்தும் நிலை இன்று தமிழகத்தில் பெருகியுள்ளது. ஒவ்வொரு கட்சியும் தனியாகத் தொலைக்காட்சி நிலையத்தை நடத்தி, வாக்குவேட்டையை மேற்கொள்கின்றன. கடந்த இரு தேர்தல்களிலும் தொலைக்காட்சிச் சேவைகள் முக்கிய பங்கு வகித்தன. பாரதீய ஜனதாக் கட்சி முந்திய தேர்தலில் வெற்றி பெற உதவியது தொலைக்காட்சிச் சேவைதான்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1927ஆம் ஆண்டுதான் தமிழ்த்துறை ஆரம்பிக்கப்பட்டது. அதற்குமுன் ஆங்கிலமொழி மூலம் மட்டும்தான் பல்கலைக்கழகக் கல்விப் போதனை நடைபெற்றது. தமிழ்த் துறை உருவாக்கப்பட்டபின் கிராம மட்டத்தில் தமிழ் எழுத்தாளர்கள் உருவாகினர்.

தமிழகத்தில் முன்பு எழுத்தறிவு குறைந்தவர்களே அதிகமாக இருந்தனர். 9 சதவீதமானவர்கள் எழுத்தறிவு குறைந்தவர்களாக இருந்ததால் வாசிப்புப் பழக்கம் குறைவாக இருந்தது. வெளிநாட்டு நிறுவனங்கள் எழுத்தறிவு குறைந்தவர்களுக்கு ஏற்றவகையில் வெளியீடுகளை வெளியிட்டன. அவை நல்ல வரவேற்பைப் பெற்றன. இன்று எழுத்தறிவு உடையவர்களின் எண்ணிக்கை 65 சதவீதமாக உயர்ந்துள்ளது.

புத்தகம் வாசிப்பதன் மூலம் சமூக மாற்றம் பெரிதாக வரும் என எதிர்பார்க்க முடியாது. வாசிப்புப் பழக்கம் அதிகரிக்க மக்கள் அறிவும் வளரும். சமூக மாற்றம் பெரிதாக ஏற்படும் எனக்கூறமுடியாது.

தமிழகத்தில் சமஸ்கிருதம் சார்ந்த தமிழ் சொற்களின் பாவனை முன்னர் இருந்தது. அந்த இடத்தை இன்று ஆங்கிலம் பிடித்துள்ளது. ஆங்கிலமொழி கலந்த தமிழ்ச் சொற்களே பாவனையில் இருக்கின்றன. இங்கு - ஈழத்தில் - இன்னமும் சமஸ்கிருதம் தழுவிய தமிழ்ச்சொற்கள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஈழத்துக் கவிஞர்களின் கவிதைகள் தமிழகத்தில் உரிய இடத்தைப் பெறுகின்றன. ஆனால், சிறுகதைகள் அந்த இடத்தைப் பிடிக்கவில்லை. தமிழகத்தில் ஈழத் தமிழர்கள், ஈழமரபு ஆகியன குறித்து அறிவதில் மாணவர்கள் ஆர்வமாக உள்ளனர் - என்றார் அவர். (ப-3)

## கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு ஊர்காவற்றுறையில் பரிசு

ஊர்காவற்றுறை,ஜூலை24

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிறந்த ஆரோக்கியத்தைப் பேணும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். அவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய உப அலுவலகங்கள் ரீதியில் குடும்ப நல மருத்துவ உத்தியோகத்தரின் உதவியுடன் இவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் தொடர்பில் தாய்மார்கள் மத்தியில் சிறந்த ஆரோக்கியத்தைப் பேணுதல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தெரிவித்தார். (ஒ-16)

## பல்கலைக்கழகங்கள் இரண்டுக்கு இடையே விரைவில் ஒப்பந்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

சென்னைப் பல்கலைக்கழகத்துக்கும் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வி.அரசுவும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் அ.சண்முகதாஸும் இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறை மாணவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திலும் கற்கைநெறிகளை பயிலமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## மரப்பலகை கடத்திய வாகனச் சாரதி கைது

வடமராட்சி,ஜூலை24

அல்வாய் வடக்குக் கோட்டையில் அரிந்த வேப்ப மரப் பலகைகளை இரு சக்கர உழவு இயந்திரத்தில் கடத்திச் சென்ற சாரதியைப் பருத்தித்துறைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோது அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இரு சக்கர உழவு இயந்திரமும், அரிந்த பலகைகளும் பருத்தித்துறைப் பொலீஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ஒ-173)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

சாவகச்சேரி,ஜூலை24

யாழ். மாவட்டத்திலுள்ள தற்காலிக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. இதற்கான அதிகாரம் யாழ். அரச அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க இணைப்பாளர் மா.ஜெயமோகன் தெரிவித்தார்.

இதுதொடர்பான சந்திப்பு கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள சமுர்த்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இச்சந்திப்பிலேயே சமுர்த்தி உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்குதல் தொடர்பாக அதிகாரத்தை சமுர்த்தி அதிகாரசபைப் பணிப்பாளர் நாயகம் மித்திரத்தின யாழ். அரச அதிபருக்கு வழங்கிப் பணிப்புரை விடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனத்திற்கான கடிதங்கள் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனிடம் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

இந்த நிரந்தர நியமனங்கள் யாவும் ஒரு மாத காலத்துள் வழங்கப்படவேண்டும் என்றும் - அதிகார சபைப் பணிப்பாளர் நாயகத்தால் அரச அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டில் தற்காலிக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை தொழிற்சங்கத்தின் முயற்சியால் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.(ஒ-31-117)

## ஆசிரிய நியமனப் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை24

இன்று நடைபெறவுள்ள ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். கல்வி வலயம் வந்து சேர்ந்துள்ளன.

இப்பரீட்சை வினாத்தாள்களை கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து கல்வி அதிகாரிகள் இருவர் உட்பட ஆறு பேர் எடுத்துவந்தனர்.

இன்று குடாநாட்டின் 62 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சையில் 9 ஆயிரத்து 206 பேர் தோற்றுகின்றனர். இப்பரீட்சை முடிவடைந்ததும் இன்று பற்பகல் பரீட்சை வினாத்தாள்கள் கொழும்புப் பரீட்சைத் திணைக்களத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கில் தோற்றும் பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் திருத்தும் பணி அடுத்த வாரம் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்படும் என்றும் -

இதன் பெறுபேறுகள் ஓகஸ்ட் மாத இறுதிப் பகுதிக்குள் வெளியாகும் என்றும் -

யாழ். கல்வி வலய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-6)

### நாளை

ஆடி 10
ஞாயிற்றுக்கிழமை
(25.07.2004)
திதி : அட்டமி
பிற்பகல் 4.29 வரை.
நட்சத்திரம்: சுவாதி
பின்னிரவு 1.47 வரை.
சுபநேரம்: 9.02 - 10.32
ராகுகாலம்: 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

## கணவனின் கத்திக் குத்தில் மனைவி உயிரிழப்பு

விசுவமடு,ஜூலை24

குடும்பத்தகராறு காரணமாகக் கணவனது கத்திக் குத்துக்கு இலக்காகி மனைவி உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை விசுவமடு, தர்மபுரம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து இடம்பெயர்ந்து தர்மபுரத்தில் வசித்துவந்த சு.இரத்தினராசா (குட்டி) என்பவரின் மனைவியான இ.ராஜினி (வயது 33) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

எஸ்.திலகவதி (வயது 48), சுப்பிரமணியம் (வயது 64) என்போரே இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

5 பிள்ளைகளின் தந்தையான சம்பந்தப்பட்ட மேற்படி நபர் தலைமறைவாகி விட்டார். இச்சம்பவம் தொடர்பாகத் தமிழீழக் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

(ஒ-402-204)

### உதாவாக்கு

தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 2 பரப்பு 1குழி காணியுடன் கூடிய வீடும், ஏழாலை மத்தி பசுபதி கடையடியில் 2 பரப்புக காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P.: 077 6125140 (34426)

யாழ்.பழைய பூங்கா வீதியில் மறவன் குளத்துக்கு மேற்காக 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்) தொடர்பு: 222 2888. (34389)

கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையில் சண்முகநாத மகாவித்தியாலயத்துக்கு அருகில் வீட்டோடு இணைந்த மலசலகூட குளியலறைகள், மேலதிக மலசலகூடம், தண்ணீர்த்தாங்கி வசதிகளுடன் இரண்டு வீடு வளவுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சபாரத்தினம் பிரகதீஸ்வரன் மே/பா இ.அஞ்சலோ, வசந்தா ஸ்ரோர்ஸ், ஊர்காவற்றுறை. T.P. 077 6176623 (34348)

இலக்கம் 2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் வீதியில் உள்ள 3 பரப்புக் காணியும் சகல வசதிகளுமுள்ள வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு ச.தேவராஜனுடன் தொ.பே. இலக்கம் 021-222-2490 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளவும். (சி36326)

## தவறிவிட்டது

தொமிங்கு செபமாலையம்மா (505392264V), யேசுதாசன் ஜூலியற் தயாளினி (807314522V), யேசுதாசன் சதாநந்தினி ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள், ஒரு வங்கிப் புததகம், அடகுத்துண்டு என்பன அடங்கிய கைப்பை 21-07-04 புதன்கிழமையன்று யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் குகன் ஸ்ரோர்ஸ், 180(380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இலக்கம்: 021-222-2767) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (34436)

676, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பரமசாமி அனுஷா என்பவரது திருமணப் பதிவுப்பத்திரம், பிறப்புச்சான்றிதழ், மக்கள் வங்கிப்புத்தகம் மற்றும் பல பொருள்களுடன் அடங்கிய பை முகமாலை சோதனைச் சாவடிக்கும் புளியங்குளத்திற்கும் இடையில் 20-07-2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (34427)

## விற்பனைக்கு

13 ஸ்ரீ தொடரிலக்கமுடைய Mitsubishi Car full A.c, Economic gear, auto Shutter உடன் நல்ல நிலைமையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இலக்கம் 200, பலாலி வீதி, கந்தர்மடச்சந்தி (அரசடி வீதி) யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021 222 5680. (34430)

1½ லீற்றர் பால் தரக்கூடிய சணல் ஆடு 2, குட்டி 1 உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: 228/1, சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி (பரமேஸ்வராச் சந்திக்கு அருகில்) (34428)

## கோழிக்குஞ்சு விற்பனை

தரமான Prima பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(34322)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi வட்டுக்கோட்டைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34323)

## மணமகள் தேவை

1965இல் பிறந்த யாழ்ப்பாண வர்த்தகருக்கும் (கிரகபாவம் 40), 1970இல் பிறந்த கொழும்பில் Firm Officer (கிரகபாவம் 30), செவ்வாய் தோஷமற்ற, அரச உத்தியோகத்தருக்கும் அழகிய மணப்பெண்கள் தேவை. 1969 சிங்கப்பூரில் Surgeon இரண்டில் செவ்வாய் (கிரகபாவம் 35), சிங்கப்பூர் செல்ல விரும்பும் டாக்டா மணமகளும் தேவை. தொடர்பு: T.P. 077 6140273. (34422)

## குருபூசை

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை பகல் 10.30 மணி முதல் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. புராணபடனம், சுந்தரர் அருளிய அருட்பாடல்கள் ஓதுதல், பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. அன்று சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயத்தில் காலையிலும் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் பிற்பகலிலும் குருபூசை இடம்பெறும். (ஒ-28)

## சிரமதானம்

சுழிபுரம்,ஜூலை24

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் முன்பாகத் தொல்புரம் நோக்கிச் செல்லும் பாணா வெட்டி வீதியில் உள்ளூராட்சி சபை ஊழியர்கள் சிரமதானம் மேற்கொண்டனர். (ஒ-28)

## விற்பனையாளர் தேவை

மருந்து வகையில் (Pharmacist)
அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும். நேர்முகப் பரீட்சை 25.07.2004ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையில் கீழ்க் காணும் முகவரியில் நடைபெறவுள்ளது.

**The Peninsula Group**
127/10, Temple Road, Jaffna
(Near Surveyor Department)
T.P. No.: 021 222 3720

(34429) (24-12-21-15)

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:**
**2004.08.05, பி.ப.2.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்**
**கடைசித் திகதி: 2004.08.06, ந.ப. 12.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் திறந்துபார்க்கப்படும் திகதி:**
**2004.08.06. பி.ப.3.00 மணி**

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (வற் உட்பட) |
|---|---|---|
| கொத்தியாலடி குப்பை கொட்டும் களத்தைச் சூழ முட்கம்பி வேலி அமைத்தல் (மயானம் உள்ளடங்கலாக) | 7000.00 | 575.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் மூலப் பிரதியை *'செயலாளர்', வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்* என்ற முகவரிக்கும், அதன் பிரதியை *'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்'* உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது புற மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2004.07.22. (C-36324)(38-12-15-21)

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.


கொசுக்களின் எமன் KHIND

# நுளம்புத் தொல்லைக்கு
# ஓர் புரட்சிகரமான அறிமுகம்!!!

இனியில்லை உறக்கமில்லா இரவுகள்!

## KHIND மின்சார நுளம்புக் கொல்லி

Coils தேவையில்லை Mats தேவையில்லை Nets தேவையில்லை

- ★ 9W Ultra-Violet Tube மூலம் கொசுக்களைத் தாக்குகின்றது.
- ★ சக்திவாய்ந்த மின்பாய்ச்சல் வலையின் மூலம் கொசுக்களை அழிக்கிறது.
- ★ Suction Fan மூலம் கொசுக்களை உள்ளுறிஞ்சி அழிக்கின்றது.
- ★ உடல் நலத்திற்குப் பாதிப்பு இல்லை.
- ★ பாவனைக்கு முழுமையான பாதுகாப்பு.
- ★ புகை இல்லை/ மணம் இல்லை.
- ★ பாதுகாப்பான கவசம்.




100% Guaranteed on performance.
12 Months Warranty.
1 Week Money back Guarantee.

Sole Agent:
Access
Access International (Pvt) Ltd.

மேலதிக விபரங்களுக்கு,
ஷாம் : 077-7726290
தொலைபேசி : 021 4590686

Authorized Distributor:
SDS கணனி சேவைகள்,
# 125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# அல்கெய்டாவினால் ஏற்படவிருந்த ஆபத்தை முறியடிக்க அமெரிக்க அரசு தவறிவிட்டது




செப்ரெம்பர் 11 விசாரணைக் குழுவினால் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கையின் முன் பக்கத்தைப் படத்தில் காணலாம்.

## செப்.11 விசாரணைக் குழு கண்டனம்

வொஷிங்ரன்,ஜூலை24

அல்கெய்டாவினால் ஏற்படவிருந்த ஆபத்தை முழுமையாக எதிர்கொண்டு முறியடிப்பதற்கு தவறிவிட்டதாக புஷ் - கிளிங்ரன் அரசுகளைக் கண்டித்துள்ளது செப்ரெம்பர் 11 விசாரணைக் குழு. அத்துடன் அமெரிக்க உளவுத்துறையில் தீவிர மாற்றங்களைச் செய்யும்படியும் அது சிபார்சு செய்துள்ளது.

பத்துப்பேர் அடங்கிய விசாரணைக்குழு தனது இறுதி அறிக்கையை ஒருமனதாக வெளியிட்டுள்ளது.

ஆழமான நிறுவனத் தவறுகள் நடந்துள்ளன. 2001 ஆம் ஆண்டு 3,000 பேரை பலிகொண்ட அல்கெய்டா தீவிரவாதிகளின் விமானக் கடத்தல் தாக்குதலை தவிர்த்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் தவறவிடப்பட்டுள்ளனவென்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கொள்கை, நிர்வாகம் தகுதித் தோல்வி மட்டுமல்ல, எல்லாவற்றுக்குமேலாக கற்பனை தோல்வியுமாகும் என்று விசாரணைக் குழுவின் தலைவர் முன்னாள் நியூஜேர்ஸி குடியரசுக் கட்சி ஆளுநர் ரொம் கீன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

எமது குறிக்கோள் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய தாக்குதல்களை தவிர்ப்பதுதான். நாங்கள் உரையாடிய நிபுணர்கள் அனைவருமே மேலும் ஒரு மிகமோசமான தாக்குதல் நடத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவே கூறினார்கள். நேரத்தைக் கடத்தாமல் நாம் தயாராக வேண்டும்; செயற்படவேண்டும் - என்றார்.

அன்றைய தாக்குதலுக்கு முன்னதாக கிளிங்ரன் அல்லது புஷ் நிர்வாகங்களுக்கு பயங்கரவாதமானது பாதுகாப்புத் தொடர்பாக அக்கறை கொள்ளவேண்டிய விடயமாகத் தென்படவில்லை என்று 567 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கை கூறுகிறது.

தேசிய உளவுத்துறை பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும்படியும் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான தேசிய மையம் ஒன்றை நிறுவும் படியும் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதை மேம்படுத்தவும் பயங்கரவாத பயமுறுத்தலுக்கெதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க முடியுமென்றும் அறிக்கை தெரிவித்துள்ளது.

விசாரணைக் குழு அறிக்கையை அதிபர் புஷ் வரவேற்றுள்ளார். ஆக்கபூர்வமான அறிக்கை என்று குறிப்பிட்டுள்ள அதிபர் அதனை வாசித்து அறியவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.(ப-8)

# துருக்கியில் ரயில் விபத்து 139 பேர் பலியானார்கள்!



அங்காரா,ஜூலை24

துருக்கியின் அங்காரா நகரில் இருந்து இஸ்தான்புல் நகர் நோக்கி பயணிகள் ரயில் சென்று கொண்டிருந்தது. 300 இற்கும் மேற்பட்ட பயணிகள் அதில் பயணஞ்செய்து கொண்டிருநதனர்.

அந்த அதிவேக ரயில் சகாரியா மாகாணத்தில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று தடம்புரண்டது. அதில் 4 பெட்டிகள் மற்றும் என்ஜின்கள் தண்டவாளத்தை விட்டு விலகிக் கவிழ்ந்தன.

இந்த விபத்தில் ரயில் பயணிகள் 139 பேர் பலியாகிவிட்டனர். 100 இற்கும மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். பலியானவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்கும். காயம் அடைந்தவர்கள் சகாரியா மாகாணத்தில் உள்ள பல்வேறு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 128 பேர் பலியானதாக அரசு தரப்பில் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி விசாரணை நடைபெற்று வருகிறது.

"கடந்த ஜூன் மாதம்தான் இந்த அதிவேக ரயில் விடப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பாதையில் உள்ள தண்டவாளம் மிகப் பழமையானது. இந்த அதிவேக ரயில் செல்ல அந்தத் தண்டவாளம் ஏற்றது அல்ல என்று ஏற்கனவே அதிகாரிகள் புகார் கூறி வந்தனர். ஆனால், என்ஜினில் திடீர் கோளாறு ஏற்பட்டதால்தான் இந்த விபத்து நடந்ததாக இன்னொரு தரப்பினர் கூறுகிறார்கள். விபத்துக்கு நாசவேலை காரணமாக இருக்கலாமா என்பது குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.

ரயில் அதிக வேகத்தில் செல்லவில்லை. சாதாரண வேகத்தில்தான் சென்று கொண்டிருந்தது என்றும் கூறப்படுகிறது. (8)

# பேச்சுக்கள் வெற்றிபெறும்; பாகிஸ்தான்அதிபர் நம்பிக்கை

இஸ்லாமாபாத்,ஜூலை24

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பன்முகப் பேச்சுக்கள் வெற்றிபெறும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சார்க் மாநாட்டில் பங்கேற்க பாகிஸ்தான் சென்றுள்ள மத்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் நேற்று நாடு திரும்பினார். அதற்கு முன்னதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஏற்கனவே, அந்நாட்டு பிரதமர், வெளியுறவு அமைச்சர் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினார்.

முஷாரப் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இந்தியாவும் பாகிஸ்தானும் மற்ற நாடுகளைப் போல் நட்பாக வாழலாம். இரு நாடுகளுக்கும் இடையே தற்போது நடக்கும் பன்முகப் பேச்சு வெற்றிபெறும் என்று நம்புகிறேன். தெற்காசியாவின் அமைதி மற்றும் நல்ல எதிர்காலத்திற்கான முயற்சிகளை இந்தியா தொடரவேண்டும்.

பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கை வெளிப்படையானது. எல்லா நாடுகளுடனும் பேச்சின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டது - என்றார்.

# மீண்டும் திறக்கப்படுகின்றன இந்தியா - பாக். தூதரகங்கள்

இஸ்லாமாபாத்,ஜூலை24

மும்பாயில் பாகிஸ்தான் தூதரகத்தையும், கராச்சியில் இந்திய தூதரகத்தையும் மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே உறவு மோசமாகிய நிலையில் 1994 ஆம் ஆண்டு மும்பாயில் இருந்த பாகிஸ்தான் தூதரகமும் கராச்சியில் இருந்த இந்திய தூதரகமும் பரஸ்பரம் மூடப்பட்டன.

தற்போது இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு மலர்ந்து வரும் நிலையில், மீண்டும் இவ்விரு தூதரகங்களையும் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு இறுதிக்குள் இவை திறக்கப்பட்டு விடும் என எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் பாகிஸ்தான் முன்னாள் இராணுவ தலைமை தளபதி ஜஹாங்கீர் கராமத்திற்கு தூதர் பதவி அளிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதராக தற்போதுள்ள அஷ்ரப் ஜஹாங்கீர் காஜிக்கு பதில் அந்த பதவியில் கராமதை நியமிக்க பாகிஸ்தான் அரசு திட்டமிட்டுள்ளதாக பாக்.பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (8)

## பணயக் கைதிகளை மீட்க இந்தியா நடவடிக்கை

இஸ்லாமாபாத்,ஜூலை24

ஈராக்கில் மூன்று இந்தியர்கள் கடத்தப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அவர்களைப் பத்திரமாக மீட்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஈராக்கில் கறுப்புக் கொடியினர் என்ற தீவிரவாத அமைப்பினர் 3 இந்தியர்கள், கென்யா நாட்டைச் சேர்ந்த மூவர், எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட 7 பேரை கடந்த புதன்கிழமை கடத்திச் சென்றனர்.

கடத்தப்பட்ட இந்தியர்களின் பெயர்கள் வருமாறு: அந்தர்யாமி, திலக் ராஜ், சுகதேவ்சிங்.

ஈராக்கில் இவர்கள் வேலை பார்க்கும் குவைத் நிறுவனம் நாட்டை விட்டு வெளியேறாவிட்டால் கடத்தப்பட்டவர்களின் தலைகளைத் துண்டிக்கப் போவதாகவும் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

இஸ்லாமாபாத்தில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங் கடந்த வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஈராக்கில் கடத்தப்பட்ட இந்தியர்கள் கூட்டணிப் படை வீரர்கள் அல்ல அப்பாவிகள். அவர்களை விடுவிப்பதற்கும், பாதுகாப்பாக தாயகம் திரும்புவதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஈராக், குவைத் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வருகிறோம். புதுடில்லியில் உள்ள அமெரிக்க மற்றும் குவைத தூதரகங்களுடன் இடைவிடாது தொடர்புகொண்டு வருகிறோம். கடத்தியவர்களின் குறிக்கோள் எதுவாக இருந்தாலும், இச்செயல் கண்டிக்கத்தக்கது - என்றார். (8)

## தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் இடங்களுக்கு சீல் வைப்பு

பக்தாத்,ஜூலை24

ஈராக் தலைநகர் பக்தாத்தில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தக் கூடிய வாய்ப்புள்ள இடங்களை அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் ஈராக் பாதுகாப்புப் படையினர் கடந்த வியாழக்கிழமை சீல் வைத்தனர். (8)

# வெட்டிக்கொலை செய்வதற்கு முன் எம்மை விரைவில் காப்பாற்றுங்கள்

## பணயக் கைதிகள் உருக்கமான வேண்டுகோள்



கடத்தப்பட்ட இந்திய பணயக் கைதிகள்

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 7 பணயக்கைதிகள் தங்கள் உயிரைக்காக்க உதவுமாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான வீடியோ காட்சி வெளிநாட்டு செய்தி நிறுவனத்துக்கு (ஏ.எவ.பி) அளிககப்பட்டது.

இந்த வீடியோவில் பணயக் கைதிகளாக 7 பேர் காணப்படுகின்றனர். இதில் மூவர் இந்தியர்கள், மூவர் கென்யா நாட்டைச் சேர்ந்தவர்கள், ஒருவர் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர். இவர்கள் அனைவரும் லொரி சாரதிகள் என்று தெரிகிறது.

இந்த வீடியோ உண்மையானதுதான் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாங்கள் வீடு திரும்ப விரும்புகிறோம். எங்களைத் துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்யும் முன், எங்கள் உயிரைக் காக்க உதவுங்கள். எங்களைக் காப்பாற்றத் தவறினால் எங்களது குழந்தைகள் அநாதைகள் ஆவதற்கு நீங்களே காரணமாகிவிடுவீர்கள் என்று சோகம் கப்பிய முகத்துடன் ஒரு பணயக் கைதி கதறுவது வீடியோவில் பதிவாகியுள்ளது.

இதேபோன்று ஒரு வீடியோவை அரபு செயற்கைக் கோள் தொலைக்காட்சியான அல்-அரபியா புதன்கிழமை ஒளிபரப்பியது. அதில 6பேரே பணயக்கைதிகளாக காட்டப்பட்டிருந்தனர். அதில் மூவர் இந்தியர், இருவர் கென்யர், ஒருவர் எகிப்தியர்.

ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்துக்கு கிடைத்த வீடியோவில், வெள்ளைச்சட்டை, நீளக்காற்சட்டை அணிந்து சுவருக்கு முன்னால் தாடியுடன் உடல் பருமனான ஒருவர் நின்றுகொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

அரபு மொழியில் அவர் பேசினார். அவர் எகிப்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. அவர் பேசும்போது அழுதுவிட்டார். உடல் முழுவதும் வியத்திருந்தது.

குவைத் நிறுவனம் ஒன்றில் நாங்கள் வேலை பார்க்கிறோம். எங்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். எங்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள். அமெரிக்கர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று கடவுள் பெயரால் உறுதி கூறுகிறேன். தாயகம் திரும்பவே விரும்புகிறோம். கடவுள் மீது ஆணையிட்டு சொல்கிறோம் - என்றார். (8)

# 65 பாகிஸ்தானியர் விடுதலை

கடந்த 2001ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியபோது ஆப்கானிஸ்தானில் உள்ள பாகிஸ்தானியர்கள் அமெரிக்காவை எதிர்த்துப் போரிட்டனர். சிறை பிடிக்கப்பட்ட அந்த பாகிஸ்தானியர்கள் ஆப்கான் தலைநகர், காபூல் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

மனிதாபிமான அடிப்படையில் அவர்களை விடுதலை செய்ய ஆப்கானிஸ்தானும் அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன. முதல் கட்டமாக 65 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதே போல் மேலும் 500 பேர் விரைவில் விடுதலை செய்யப்பட இருக்கிறார்கள். (8)

# 83 கலவரங்களுக்காக அப்போதைய அரசியல் தலைமை தமிழ்மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாட்டில் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை மற்றும் பேரழிவுகளுக்காக அதனுடன் சம்பந்தப்பட்ட அரசியல் குழுவினரும், தலைமைத்துவமும் தமிழ் மக்களிடம் தேசிய ரீதியாகவும், பகிரங்கமாகவும் மன்னிப்புக் கோர வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பிலும் தலதாமாளிகையிலும் குண்டுத் தாக்குதல் நடத்தியவர்களும் மனிதாபிமான ரீதியில் மன்னிப்புக் கோரவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

### பகிரங்க மன்னிப்பு

அன்று இத்தகைய வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்ட அரசியல் குழுக்களோ, தலைமைத்துவங்களோ இன்றுவரை தேசிய ரீதியாகவோ, பகிரங்கமாகவோ மன்னிப்புக் கோரவில்லை, எனினும், 50 ஆவது சுதந்திர தின விழாவில் இதற்காகத் தாம் மன்னிப்புக் கோரியுள்ளார் என ஜனாதிபதி கூறினார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்கள் மீதான வன்செயல்கள் வடக்கிலும் கிழக்கிலும் 30 ஆண்டுகளுக்கு முன்னரே உருவாகின. சிலர் வன்முறையில் நாட்டை ஆள எத்தனித்தார்கள். ஆனால், அவை இன்னும் தொடரும் நிலையிலேயே காணப்படுகின்றன. இத்தகைய வன்முறையால் ஜனநாயகத்துக்கே பாதிப்பு ஏற்பட்டது. கறுப்பு ஜூலையும் இவ்வாறு உருவாக்கப்பட்ட வன்முறைகளில் ஒன்றாகும். இவை காரணமாக 7 லட்சம் தமிழர்கள் நாட்டை விட்டும் வெளியேறும் நிலை உருவானது. நாடே இக்கட்டான நிலைக்கத் தள்ளப்பட்டது.

### ஜூலைக் கலவரம்

எமது நாட்டின் புத்திஜீவிகள் பலர் வெளியேறியதால் ஏற்பட்ட பாதிப்பே அதிகம். சிலர் தமக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளை வழங்கக் கோரியபோது வீடுகள் எரிக்கப்பட்டன. ஜூலைக் கலவரத்தை நாம் மீண்டும் பின்நோக்கிப் பார்க்கவேண்டும். கொழும்பில் வீடுகள் எரிவதை நான் நேரடியாகவே பார்த்தேன். இந்த அநியாய அக்கிரமச் செயல்களுக்கு மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறுவழியில்லை. அதே வேளையில் நாட்டை ஆண்டவர்கள் நினைத்திருந்தால் இதனைத் தடுத்திருக்கலாம். ஆனால் அப்படி அவர்கள் செயற்படவில்லை.

### கல்வியே துணை

இந்நாட்டை சீராக இட்டுச்செல்ல கல்வியே துணையாக அமையும். எனவேதான் கல்வியில புதிய திட்டங்களை வகுக்க அந்த அமைச்சுப் பொறுப்பை நானே வைத்துக்கொண்டேன்.

கல்வி என்பது ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இன்றைய கல்வித்திட்டத்தில் பல குறைபாடுகள் உண்டு.

அனைத்து மதங்களையும் மதிக்கத்தக்க சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டும். இது இன்றைய கட்டத்தில் முக்கிய தேவையாகும்.

இன்று சமூகத்துக்கு ஒவ்வாத குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. ஊடகங்கள் மிகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். தனியார் ஊடகங்களுக்கு நாம் சில கட்டுப்பாடுகளை விதித்தோம். ஆனால், அது பூரணமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை.

### வன்முறையற்ற கலாசாரம்

இன்று எமக்குத் தேவைப்பட்டது வன்முறையற்ற கலாசாரமே. பாடசாலை மாணவர்கள் மீது பெற்றோர்கள், ஆசிரியர்கள் முக்கிய கவனம் எடுப்பது காலத்தின் தேவையாகும்.

வன்முறையற்ற கலாசாரத்தைப் பின்பற்றும் சமூகத்தை உருவாக்குவதே அவசரமான பணியாகும். முப்பது வருட கால வன்முறைக் கலாசாரத்தைக் கண்டும் கேட்டும் நன்கு அனுபவித்துவிட்டோம். பயங்கரவாதம் மூலம் எதனையும் சாதிக்க இயலாது. அனைத்தும் பேச்சுக்கள் மூலமே தீர்க்கப்படவேண்டும்.



சர்வாதிகார ஹிட்லரின் நடவடிக்கையால் யூதர்களும் அழிக்கப்பட்டு இறுதியாக அவரும் அழியுண்டார். இதனை நாம் படிப்பினையாகக் கொள்வது பொருத்தமாகும் இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

# இந்தியா—இலங்கை இடையே விரைவில் பாதுகாப்பு ஒப்பந்தம்

இலங்கைக்கும் - இந்தியாவிற்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் அதிவிரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

ஏற்கனவே, அமெரிக்க அரசு வழங்கியுள்ள போர் கண்காணிப்புக் கப்பலுக்கு நிகரான போர்ப் பயிற்சிக் கப்பல் ஒன்றையும் வழங்க இந்தியா முன்வந்துள்ளது என வர்த்தக, வணிகத்துறைகள், கூட்டுறவு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் விவசாய நீர்ப்பாசன, காணி, கால்நடைகள் அமைச்சர் அநுர குமார திஸாநாயக்கவும் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர்கள் இந்தத் தகவல்களை வெளியிட்டனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் மூலம் இலங்கைக்குப் பெரும் நன்மைகள் கிட்டியுள்ளன.

வர்த்தக ஊக்குவிப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் தொடர்பான மூன்று ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படவுள்ளன.

இந்திய அரசு முன்னைய அரசின்போது வழங்கிய 15 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமாக கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளுககாக மேலும் 10 கோடி டொலர்களை வழங்க உறுதியளித்துள்ளது. இதன் மூலம் கிராமப் புறப்பாதை அபிவிருத்தி மற்றும் பொது வசதிகள் மேம்படுத்தப்படும்.

இலங்கையின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்கும். படைவீரர்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் பயிற்சி அளித்தல், இராணுவப் பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்குதல், பலாலி விமான நிலையத்தைச் சீரமைத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம் அதிமுக்கியத்துவமானதாகும்.

இப்பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு அமைய சகல விதமான தொழில்நுட்ப வசதிகளையும் கொண்ட போர்ப் பயிற்சிக் கப்பல் ஒன்றையும் வழங்க இந்தியா உறுதியளித்துள்ளது. இந்தக் கப்பல் ஏற்கனவே அமெரிக்க அரசால் வழங்கப்பட்டுள்ள கப்பலுக்குச் சமமானது என்று அமைச்சர்கள் இருவரும் செய்தியாளர்களிடம் கூறினர்.

இலங்கை - இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கு கடற்பாதுகாப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையா? - என செய்தியாளர்கள் கேட்டபோது இது தவறு. அப்படி எதுவும் பேசப்படவில்லை - என்று அமைச்சர் பதிலளித்தார். (க)




NIIT இல் இரு வருட DNIIT கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்கள் UK, USA, Canada Australia, Ireland Newzealand ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் மிகக்குறுகிய காலத்தில் பட்டதாரியாகிட நேரடி அனுமதி !

B.Sc (Hons) U.K

Join with our 2.5 million students worldwide
To become a complete IT Professional

e Technology Software Engineer

After O/L or A/L

**About DNIIT**

இது **eCommerce + Internet** ஐ உள்ளடக்கிய வேலைவாய்ப்பை இலகுவில் எட்டத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு கற்கையாகும்

Futurz

**About NIIT**

உலகின் 38க்கு மேற்பட்ட நாடுகளில் 3,800ற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு 20ஆண்டுகளிற்கு மேலாகப் பயிற்சி வழங்கும் நிறுவனம். ஆசியாவின் No 1 பயிற்சி நிறுவனம். என்பதோடு **MicroSoft** இன் மிகச்சிறந்த பயிற்சி நிறுவனமும் இதுவே.

**Short term courses:**
MicroSoft .Net (Vb.net, ASP.Net, C#), J2EE, Java.
SQL 2000, Web Designing, MS Office

NIIT

The Global Leaders in IT Education & Training 347 Kasthuriyar Road, Jaffna TP 021 222 7250

# எளிதில் மறக்கமுடியாத சேவையாளன்



"**வெ**ள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு" என்பது பொய்யாமொழி. தான் சார்ந்த பூமி தழைக்கவும். பெற்றோர் உவக்கவும் வாழ்ந்த பேராளர்கள் இம்மண்ணில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறு ஒளி வீசிய உத்தமன் குமரையா துரைராசாவை நாம் மறக்கமுடியாது. ஏன் இந்தப் பூமியே ஒட்டு மொத்தமாக அன்னாரது ஆற்றலின் மேம்பாட்டை, சேவையின் பெருமையை எப்படி எளிதில் மறக்கமுடியும்.

செந்தமிழன்பும், சிவநேயமும் பொருந்திய பெரியவர்கள் வாழும் சண்டிலிப்பாயூரில் இவர் பிறந்தார்.

இவர் சுப்பையா கற்பகம் தம்பதிகளின் புத்திரி சரவேஸ்வரியை மணம்புரிந்து ஒரே மகளான காஞ்சனாவின் அப்பாவாகி முகுந்தனை மருமகனாக்கி அர்சகன் எனும் குழந்தைக்குப் பாட்டனாராகி இல்லறவாழ்வில் இனிமை கண்டார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்விச் செல்வத்தைப் பெற்றதன் பயனாய் கொழும்பு பல்கலைக்கழகம் புகுந்து விஞ்ஞானப் பட்டதாரியாகினார். கல்விக்குக் கரையில்லை என்பர். அந்த உண்மையை உய்த்துணர்ந்த துரைராஜா, லண்டன் பல்கலைக்கழகச் சிறப்புப்பட்டத்தையும் தனதாக்கிக்கொண்டார்.

கல்விப்பயிரை வளர்க்க எண்ணி அருணோதயா, மத்திய கல்லூரி என்பவற்றில் அவர் தொண்டாற்றினார்.

கல்வியும் செல்வமும் வாழ்வியலில் இரு கண்கள் என்பதை உணர்த்த கல்வியியலாளர், இலங்கை வங்கியில் பாதம் பதிக்க முனைந்தார். உதவி நிர்வாகத்தராக (STAFF ASSISTANT) இலங்கை வங்கியில் 1962இல் சேர்ந்தார். பிரதிப் பொதுமுகாமையாளராக இலங்கை வங்கியில் இவரின் உயர்வு 1962 ஆம் ஆண்டிலிருந்து பல படிகளைத்தாண்டி 1995 வரை நீடித்தது. இக்காலப்பகுதியில் இவர் வங்கியின் செயற்பாடுகளில் பல புதுமைகளையும் நவீன தொழில்நுட்பங்களையும் புகுத்தி வங்கியியலில் நீங்காத இடம்பிடித்தார்.

இலங்கையில் இயங்கிவரும் முஸ்லிம் வர்த்தக வங்கியில் (MCM) ஆரம்பகாலத்திலிருந்து 2004 ஜனவரி வரை சிரேஷ்ட ஆலோசகராகவும் கடமை புரிந்தார்.

நிர்வாகிகளுக்கு எடுத்துக்காட்டாக முற்றிய நெற்கதிர்போல சான்றாண்மைச் செம்மையும், சேவையின் இலக்கும், சிந்தனைத் தெளிவும் சேவையின் சிகரத்திற்கே கொண்டு சென்றது.

தொழில் வளமிக்க - பரந்த ஞானப்பெருங் கடலில் உள்ளத்தெளிவோ உயர்வானது. ஆன்மீக சாயலோ அழகானது; ஆழமானது. மருதடி விநாயகனுக்காகச் செய்த அறப்பணிகள், இடக்கைக்குத் தெரியாது வலக்கை வழங்கியது.

உயர் பதவிக் காலத்தே லண்டன் மாநகரச் சான்றிதழ்கள் உட்படப் பதவிகளின் வரிசை

## நீத்தார் நினைவுரை

கங்கைபோற்பெருகியது. சர்வதேச ரீதியில் இவர் வகித்த பதவிகளும் செயற்பாடுகளும் ஏராளம்.

மெக்ஸிக்கோ, டுபாய், பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, தான்சானியா, எஹித்தீரியா, ஐக்கிய ராஜ்யம் ஆகிய நாடுகளில் உயர் பதவிகளை வகித்துள்ளார்.

இப்பெருமகனுடைய சேவை யாழ் மண்ணுக்குக் கிடைத்தது சொற்பமானாலும் யாழ். மண்ணின் பெருமையை உலகிற்கு உரத்துக் கூற வைத்துள்ளமை நாம் எல்லோரும் பெருமைப் படக்கூடிய ஒன்று.

ஒரு சில மாதங்களுக்கு முன் அவருடன் நான் தொடர்பு கொண்டபோது யாழ். மண்ணில் வங்கியாளர் பயிற்சி நிலையமாகத் தற்போது கருதப்படும் 'College of Banking' எனும் யாழ் வட்டுக்கோட்டை (Jaffna College) கல்லூரியால் நடத்தப்படும் பாடநெறிகளில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கு ஒரு கருத்தரங்கை நடத்த மனமுவந்து முன்வந்தார். அது கைகூட முன் அவர் காலன் வசமாகிவிட்டார். எங்கள் மனத் தடங்களில் நின்று என்றும் நிலைக்கும் பிறவியாவார்.

அவர் சார்ந்த நல்லோர்கள் எல்லோரும் மனம் சாந்திபெற ஆன்மா சிவன் சேவடியில் ஐங்கரன் துணைவேண்டி நிம்மதி பெறுக.

**ந.சிவரத்தினம்**
**முகாமையாளர், இலங்கை வங்கி.**

# தமிழரின் தொல்லியல் சான்றுகளை சேகரித்துக் காத்தவர் கலைஞானி



**மா**மனிதர் கலைஞானி அவர்களின் 71 ஆவது பிறந்ததின நினைவுதினம் நேற்று ஜூலை23 ஆகும்.

1933ஆம் ஆண்டு குரும்பசிட்டிக் கிராமத்தில் அரியகுட்டி தம்பதிகளுக்கு ஏகபுத்திரனாகப் பிறந்தார் செல்வரத்தினம். ஊரிலே 'தியாகன் என்று அழைக்கப்பட்டவர் உலகிற்கு 'கலைஞானியாக அறிமுகமானார்.

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது வரலாற்றுச் சாசனங்களையும் தொல்லியல் சான்றுகளையும் சேகரித்துப் பாதுகாக்கும் பெரும் பணியை நீண்டநெடுங்காலமாகவே யுத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து அவர் ஆற்றிவந்தார். இதனால், அவர் 1991 முத்தமிழ் விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரால் 'மாமனிதர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கலைஞானி தமது சேகரிப்புக்களைக் கொண்டு காலத்திற்குக் காலம் கண்காட்சிகளை நடததி வந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் அவரின் மாபெரும் அரும்பொருள் கண்காட்சி 22.09.1991 தொடக்கம் 08.10.1991 வரை பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அவரின் தனிப்பட்ட சொந்த முயற்சியினால் சேகரிக்கப்பட்ட பல்வேறு வகையான அரும்பொருள்களை உள்ளடக்கியதான முழுமையான கண்காட்சி 1974ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபொழுது நிகழ்ந்தது. இதில் தென்னாசியாவின் குறிப்பாக ஈழத்தமிழர்களின் நாகரிக வரலாற்றினைச் சித்திரிக்கின்ற பழைமைவாய்ந்ததும் பல்துறை சார்ந்ததுமான அரும்பொருள்களான தொல்லியற்சின்னங்கள், கலை, பண்பாடு, இலக்கியம், சமயம், வைத்தியம், சோதிடம், அரசியல் ஆகிய இன்னோரன்ன பல அரிய அறிவியற் பொக்கிஷங்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இதைவிட 1975 இல் குரும்பசிட்டி பரமானந்தா வித்தியாலயத்திலும் 1992இல் நாவலர் கலாசார மண்டபத்திலும் 1993 இல் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் 1994 இல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், இறுதியாக 1998இல் அவரின் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் அமைந்திருந்த தற்காலிக பணிமனையிலும் கண்காட்சிகள் இடம்பெற்று மக்கள் பாராட்டைப் பெற்றன.

காலத்திற்குக் காலம் அவர் செய்தித் தாள்களுக்கு வழங்கிய செவ்விகள் மிகவும் பயனுடைய கருத்துக்களைத் தாங்கி வெளிவந்தன. அவரின் இறுதிச்செவ்வி 07.03.2001 'உதயன்' கலைச்சுடர் பத்தியை அலங்கரித்திருந்தது. அவ்வாண்டே மாமனிதரும் இயற்கையெய்தினார்.

**- எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**

# நூல் வரிசை

**நூல்:** ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்
**ஆசிரியர்:** பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசா
**வெளியீடு:** யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



**ஆ**பத்து விளிம்பில் உள்ள கற்போர் மற்றும் கற்பவர்கள் எதிர்நோக்கும் இடர்கள் அறியப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் உலகம் முழுவதும் பல கோடி சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உடல், உள, போதாமைகள், பொருளாதார, சமூக, கலாசார நெருக்கீடுகள், யுத்தத் தாக்கங்கள் என்பவற்றாலும் ஆசிரியர்களின் வலிதாகிய கற்பித்தலாலும் கற்பவர்களுக்குப் பலத்த இடர்கள் ஏற்படுகின்றன. இன்று கற்றல் சார்ந்த இடர்களை மாணவர்கள் எதிர்நோக்குகின்றார்கள் என்பதை அறியும்போது கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியியலாளர்களின் பொறுப்புகள் மேலும் அதிகரிக்கின்றன. இதுவிடயத்தில் ஆசிரியர்கள் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

தனது வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் பொருத்தமான கல்வியை வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது என வகுப்பறையின் ஆபத்து விளிம்பிலுள்ள விசேட தேவைகளை உடைய மாணர்களை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்கான வழிகாட்டல்களையும், உதவிகளையும் செய்தல் ஆசிரியர்களின் பொறுப்பாக உள்ளது.

நவீன உளவியல்சார் வளர்ச்சியினூடு தற்போது ஒன்றிணைந்த கல்வி முறையே முதன்மைப்படுத்தப்படுகின்றது. அதாவது இவ்வாறான மாணவர்களும் சாதாரண மாணவர்களைப் போன்று அவர்களுடன் சேர்ந்து வழமையான பாடசாலைகளில் கல்வி பயிலுவர். வழமையான வகுப்பறையில் கல்வி பயிலும் இவர்களுக்கு ஏற்படும் கற்றல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தேவைப்படும் உதவிகளைச் செய்ய விசேட கல்வி தொடர்பாக நிபுணத்துவப் பயிற்சிபெற்ற ஆசிரியர் உதவுவார். இவ்வாறான நிபுணத்துவப் பயிற்சி கடந்த பதினைந்து வருடங்களாகச் சிங்கள மொழி மூலம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டில் இலங்கையில் முதன்முதலாக எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இக்கற்கைநெறி தமிழ்மொழி மூலம் ஆரம்பிக்கப்படுகின்றது.

இப்பாட நெறியின் கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக சர்வதேச தேசிய கல்வி நிபுணத்துவ ஆலோசகர்கள் பல வழிகாட்டல்களை அளித்துள்ளனர். இவ்வகையில் பேராசிரியர் சபா.ஜெயராசா ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர் என்ற நூலை எழுதியுள்ளார். நூலாசிரியருடைய உளவியல் புலமையும் இத்துறை சார்ந்த ஈடுபாடும் நூலுக்கு மெருகேற்றுகின்றது. நூலில் ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர், கற்போர் அனுபவிக்கும் தாழிகை, ஒடுக்கப்பட்டோர் கல்வி, வகுப்பறையில் நிகழும் பிறழ்வு நடத்தைகள், உளமூட்டக் குலைவு, நெருக்கீடுகள், ஆளுமைக் குலைவு, ஒத்துணர்வு, ஆசிரியரும் சீரிய நடவடிக்கைகளும், கற்றல் உபாயங்கள் போன்ற பல விடயங்கள் மிகச் சிறப்பாக இயம்பப்படுகின்றன.

**- பா.தனபாலன்**



**நூல்கள்:** 1. ஊடக இயல் கலைச்சொல் அகராதி
2. மின்னியக்கப் பத்திரிகை இயல் ஓர் அறிமுகம்
**ஆசிரியர்:** அருள்திரு.ரூபன் மரியாம்பிள்ளை
**வெளியீடு:** சவுந்தரம் பத்திரிகை இயல் நிலையம்
**பதிப்பு:** புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்



**ஊ**டகத்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் பலர் இன்று நம் மத்தியில் இருக்கிறார்கள்; முன்னரும் இருந்துள்ளார்கள். ஆனால், இவர்களில் தாம் அறிந்தவற்றைப் பிறருக்கு, குறிப்பாக வளரும் சமுதாயத்துக்கு வழங்கவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவ்வாறான ஆசையும் நோக்கமும் இருந்தாலும்கூட வசதியும் வாய்ப்பும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் பலவிடயங்கள் வளரும் சமுதாயத்துக்குக் கிடைக்காமலே போய்விடுகின்றன.

ஊடகத்துறை தொடர்பான நூல்கள் இன்று தாராளமாகக் கிடைக்கின்றன. அவை பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து சில நூல்கள் கிடைத்தபோதும் இவை நமது நாட்டின் நிலைமைக்கு அல்லது இங்கு புதிதாக இத்துறையில் ஈடுபட விரும்புகிறவர்களுக்கு உதவியாக இருப்பதில்லை. ஓரளவு இத்துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு அவை பயன்படலாம்.

எனவேதான் நமது நாட்டு ஊடகத்துறை மேம்பாட்டுக்கு இத்துறையில் புதிதாக நுழைகின்ற இளையவர்களுக்கு உதவக்கூடிய நூல்கள் இங்கேயே எழுதப்படுவது உகந்ததாய் இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.


அந்தப்பணியினை அருள்திரு.மரியாம்பிள்ளை தமக்குள்ள வேறு பல பணிகளுடன் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியது.

ஏற்கனவே 'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' (2001) என்ற நூலையும் 'பத்திரிகை இயல் அடிப்படைகள்' (2002) என்ற நூலையும் எழுதி வெளியிட்டுள்ள ஆசிரியர், 'ஊடக இயல் கலைச்சொல் அகராதி' (2003) என்ற நூலையும் வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு ஆசிரியர் வெளியிட்டு வழங்கியுள்ள இன்னொரு நூல் 'மின்னியக்கப் பத்திரிகை இயல் ஓர் அறிமுகம்' என்பதாகும்.

பத்தரிகைத்துறையில் ஈடுபட விரும்பும் இளைஞர்கள் மட்டுமன்றி ஊடகத்துறைகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் தம்முடன் வைத்திருக்கவேண்டியவை இந்நூல்கள்.

ஊடக இயல் கலைச்சொல் அகராதி நூலை வெளியிட்டமைக்கான காரணத்தைக் கூறுகையில்.... அச்சுத்துறை, மின்னியக்கத்துறை ஆகிய இரண்டு துறைகளையும் இணைத்து 'ஊடக இயல் கலைச்சொல் அகராதி' என்னும் தலைப்பில் கலைச்சொற்களைத் தேடியும் தொகுத்தும் உருவாக்கியும் திட்டமிட்டதன் விளைவே இந்நூலாகும்... என்று குறிப்பிடுவதிலிருந்து ஆசிரியர் இந்நூலை உருவாக்குவதற்கு எடுத்துக்கொண்டுள்ள முயற்சியும் ஆர்வமும் மட்டுமல்ல இந்தப்பணியில் அவர்தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ளார் என்பதும் அதற்காகத் தனது நேரம், சிந்தனை, வளங்கள் முதலியவற்றையும் பயன்படுத்தியுள்ளார் என்பதும் வெளிப்படுகின்றது.

**- பேனா**



**நூல்:** எக்கோ (ECHO - 2004)
**வெளியீடு:** உயர் தொழில்நுட்ப நிறுவனம் - ஆங்கிலப் பிரிவு
**ஆசிரியர்:** மாணவர் குழு

**யா**ழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆங்கிலப் பிரிவு மாணவர் வட்டத்தினர் தமது வருடாந்த வெளியீடான 'எக்கோ' (Echo) மலரை விமரிசையாக வெளியிட்டுள்ளனர். கலைப் பொலிவுடனான வண்ணமுகப்புடன் வெளியாகியுள்ள இம்மலரில் மாணவர்களின் கைவண்ணங்களுடன் விரிவுரையாளர்களின் கருத்தோவியங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆங்கிலம் உலகமொழியாகிவிட்டது என்பது ஒருபுறமிருக்க இதுவே உலகளாவிய நடைமுறை மொழியாகவும் வளர்ந்துவிட்டுள்ளது. தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை யாரும் எதிர்க்கமாட்டார்கள். தாய்மொழியில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் யாவும் கற்பிக்கப்படும்போது புரிந்துகொள்வதும் இலகுதான். ஆனால், நடைமுறையில் உலக மட்டத்தில் ஆங்கிலத்தை உதாசீனம் செய்வது பேதமையாகும். மேல்நாட்டவரின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றுவதில் அவை அவசியமில்லாத நிலையிலும் ஆர்வம் காட்டுகின்ற நாம், அந்த மொழி பல வழிகளிலும் அத்தியாவசியம் என்று ஏற்பட்டுவிட்டதன் பின் அதனை எங்ஙனம் ஒதுக்கிவிடமுடியும்?

சுயபாஷைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு நமது நாட்டுத் தலைவர்கள் ஆங்கிலத்தை முற்றாக மக்கள் புறக்கணிக்கும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தியமையானது நம் இளம் சந்ததியினரை உலகமட்டத்தில் அந்நியராக்கிவிட்டது.

இந்நிலை இப்போது மாறி வருவது மகிழ்ச்சியளிப்பதாகும். அந்தவகையில் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கிலப் பிரிவு மாணவர்கள் வெளியிட்டுள்ள 'எக்கோ' ஊக்கமளிப்பதாக உள்ளது.

ஆங்கிலம் கற்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பல கட்டுரைகள் இதில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வெ)

☞ அளவையியலும் விஞ்ஞானமுறையியலும்
**A/L - 2005, 2006**
பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன
☞ நாடகமும் அரங்கியலும்-
**A/L - 2005 , 2006**
ஆரம்பம் - சனி, ஞாயிறு - 9.00 மணி (புதியநேரம்)
(25.07.2004)
ஆசிரியர்:- தே.சுமணன்
தொடர்பு: WIN கல்வி நிலையம்,
36, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(34388)(36-21-13)



மீண்டும் யாழ். நகரில் முன்னணி வரிசையில்!!
ஈழத்தின் தலைசிறந்த இசையமைப்பாளர்கள்
ஸ்ரீகுகன், சிவராம் ஆகியோரின் நவீன இசையில்
முன்னணிப் பாடகர்கள்
ஜெயா சுகுமார், S.நிரோஜன் ஆகியோருடன்
பல இளம் பாடகர்களும், இசைக்கலைஞர்களும் கலந்து கலக்கும்
ஸப்தஸ்வரா இசைக்குழு
தொடர்பு:- ஸ்ரீகுகன், விநாயகர் வீதி,
கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் அருகில்,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (34324)(33-13-21)
ஸ்ரீகுகன்: 077 6146345
சிவராம்: 077 6146393
நிரோஜன்: 0777 282405


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி




| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 11 |
| 06 | 08 |
| 1938 | 2001 |

திதி - சப்தமி (24.07.2004)

**சரவணமுத்து கனகலிங்கம் (செட்டியார்)**
(ஓய்வுபெற்ற சாரதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(34405)(36-13-21)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 25 |
| 07 | 06 |
| 1915 | 2004 |

**அமரர் கணவதிப்பிள்ளை நாகலிங்கம்**
(பருத்தித்துறை பத்திரகாளி கோவில் பரிபாலகர் (தாடிஅப்பா))
திதி- ஸப்தமி

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பில் சிகரமாய் தந்தையாய் தாத்தாவாய் நண்பனாய் நல்லாசானாய் பத்திரகாளியின் தொண்டனாய் கோயில் தர்மகர்த்தாவாய் அறிவும் அனுபவமும் கூறி அழியா நினைவில் நின்று தாளாத்துயரில் எம்மைவிட்டுப் பிரிந்த எங்கள் குலத்தலைவரே அம்மன் பாதத்தில் நீங்கள் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்குப் பருத்தித்துறை திருநாவலூர் தெனி அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம.

பூதராயர் ஒழுங்கை, பருத்தித்துறை (34249)(35-21-13)
தகவல்: குடும்பத்தினர்



கோடைகால ஜில் சொப்பிங்
முகூர்த்தப்பட்டுப் புடைவைகள், வெளிநாட்டிலிருந்து புதிதாக உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன் சாறி வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், கோட் சூட், ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், பேபி கவுண் வகைகள், சேட், ரீசேட், சூட் வகைகள், ஜம்பர் வகைகள், ரவுசர் துணி வகைள், கவுண் வகைகள் அத்தனையும்
தரமானதாகவும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள மலிவானதாகவும்
உடனே விஜயஞ் செய்யுங்கள்
மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்
இல.10, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P 021 4590174
(C/06650)


## ஊவா மாகாண முதல்வர் பதவியேற்பு

பதுளை,ஜூலை24

ஊவா மாகாண முதலமைச்சராக காமினி விஜிதமுனி சொய்ஸா நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஊவா மாகாணசபைக் கேட்போர் கூடத்தில், ஆளுநர் சீ.நந்தா மத்தியூ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார்.

முதலமைச்சர் காமினி விஜிதமுனி சொய்ஸா, நிதி, திட்டமிடல், நீதி, கல்வி, கலாசார தோட்ட உள்ளகக் கட்டமைப்பு அமைச்சராகவும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஊவா மாகாண அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட டி.டி.டபிள்யூ விக்கிரமரத்ன, ரோஹன புஷ்பகுமார, தயாரட்ன பண்டார ஆகியோரும் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (க)

## சமுர்த்தி அதிகார சபையால் தென்மராட்சிக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜூலை24

சமுர்த்தி அதிகார சபையினர் தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தித் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

சமுர்த்தி அதிகார சபையின் சமூக அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், அபிவிருத்தி, விவசாயம் ஆகிய பிரிவுகளால் 6 லட்சத்து 17 ஆயிரத்து 500 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக அபிவிருத்திப்பிரிவின் கீழ் கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளில் 6 லட்சம் ரூபா செலவில் விவசாய வீதிகள் அமைக்கவென 4லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பயனாளிகளின் மனித வலு பங்களிப்புக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் கொடிகாமம் பூங்கடிப் பிள்ளையார் வீதியும், கைதடி மூர்த்தியாவத்தை வீதியும், வரணி வாரியாகுள வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.

சந்தைப்படுத்தல் அபிவிருத்திப்பிரிவின் கீழ் வீட்டு விற்பனை நிலையத்திட்டத்தில் 13 பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் கடனடிப்படையில் வழங்க ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் -

விவசாயப் பிரிவின் கீழ்க் கைதடி கிழக்குப் பிரிவில் வாழைச்செய்கையை ஊக்குவிக்க 50 பயனாளிகளுக்கு வழங்கவென 37 ஆயிரத்து 500 ரூபாவும் -

வழங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப்பணிப்பாளர் ஆ.ரகுநாதன் தெரிவித்தார். (ஒ-117)

## எழுதுமட்டுவாழில் குடியமர அனுமதிக்க முடியாது என அறிவிப்பு

தென்மராட்சி,ஜூலை24

அதி உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் தற்போது மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முடியாது எனப் படை அதிகாரி தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

தமது குடியிருப்புகளில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி எழுதுமட்டுவாழ் தெற்கு மற்றும் எழுதுமட்டுவாழ சிவன் கோவிலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் செய்த முறைப்பாடுகளுக்குப் படை அதிகாரி மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அத்துடன், காலக்கிரமத்தில் இப்பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## ஆயுர்வேத வைத்தியர் விவரம் திரட்டப்படுகிறது

தென்மராட்சி,ஜூலை24

நாட்டில் உள்ள ஆயுர்வேத வைத்தியர்களின் விவரங்கள் சுதேச வைத்திய அமைச்சினால் திரட்டப்படுகின்றன.

அதற்கான படிவங்கள் அந்தந்தப் பிரதேச செயலருக்கு அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (படிவங்கள் தனிச் சிங்களத்தில் உள்ளன.)

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியர்களை பிரதேச செயலகத்தில் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## சண்டிலிப்பாய் இந்துவில் பவளவிழா

வலி.தென்மேற்கு,ஜூலை24

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் பவளவிழா எதிர்வரும 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் ச.சிவஞேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக வடக்கு-கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கலந்து கொள்வார். (135)

## அபராதம் விதிப்பு

வடமராட்சி,ஜூலை24

அல்வாய் வடக்கில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்த இருவரைப் பருத்தித்துறை பொலீஸார் கைது செய் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது இருவருக்கும் முறையே 15 ஆயிரம் ரூபாவும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (எ-173)


—உடன் விற்பனைக்கு—


மேலதிக விபரங்களுக்கு:- கு. தவேந்திரன்
இல : 09 அருளம்பலம் வீதி, அரியாலை.
T.P : 021 4590527, 0777 291636



காணி விற்பனைக்கு
மிருசுவில், கண்டி றோட்டுக்கு (A9 பாதை) அருகில் புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணப் பக்கமாக 100 யார் தொலைவில் சேவிஸ் ஸ்ரேசன் அருகில் வர்த்தகத்திற்கும், வீடு கட்டவும் உகந்த தென்னை, மா, பலா, கிணறு அடங்கிய 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: T.P. 032 - 2221224
077 - 6569929
(34392)(40-21-13)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 23 |
| 10 | 06 |
| 1919 | 2004 |

**அமரர் சரவணமுத்து பொன்னையா**
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இன்று (24.07.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய பேசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தேவாலய வீதி, சங்கானை. (34372)(36-21-13)
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| அன்னையின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 11 | 04 |
| 07 | 08 |
| 1934 | 2003 |

**திருமதி அன்னபூரணம் கந்தையா**
திதி: ஸப்தமி

எம்முயிரின் உயிரான எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே!
எங்கே உங்கள் பாசமிகு வதனம்? எங்கே உங்கள் பரிவுக் குரல்
நீர் பிரிந்து ஓராண்டு ஆயினும் ஆறவில்லை எம் துயர்!
எமக்காகப் பாடுபட்ட எங்கள் மாமி அருகிலில்லையே என
அழுது புலம்புகிறோம். சோறூட்டி, கதைசொல்லி பாசமழை
பொழியத்துடித்த அம்மம்மா, அப்பம்மா, பாட்டி
எங்கேயென பிஞ்சுகள் துடிக்கின்றன!
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள்
திருவுருவம் எம்மை விட்டு நீங்காது!

அமரராகிவிட்ட எங்கள் குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (24.07.2004) சனிக்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

"குககிரி"
கைதடி கிழக்கு, கைதடி.
T.P.:021-222 5747

பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# வெடிபொருள் அகற்றப்படாததால் ஒட்டுசுட்டான் அபிவிருத்தி பாதிப்பு

## உதவி அரச அதிபர் கவலை

ஒட்டுசுட்டான்,ஜுலை24

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கென ஒதுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அங்கு மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் அகற்றப்படாமையைக் காரணங்காட்டி நிறுத்தப்படுகின்றன.

இதனால், இந்தப் பிரதேசத்தின் அபிவிருததியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

- இவ்வாறு கவலை தெரிவித்திருக்கிறார் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் திருமதி ற. செல்வராசா.

அண்மையில் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையில் கமக்கார அமைப்புகள் மற்றும் கிராம அபிவிருத்தி உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கென ஒதுக்கப்படும் திட்டங்கள் இங்கு கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்படாத பிரதேசம் எனக் காரணம் காட்டப்பட்டு திரும்பப்பெறப்படுகிறது.

மிதிவெடி அகற்றும் பிரிவினிடம் சென்று நிலைமையினை எடுத்துக்கூறியபோது அவர்கள் அதற்கான ஒத்துழைப்புக்களை நல்கிக் கொண்டிருக்கின்றோம். தொடர்ந்து செய்து வருவோம் எனத் தெரிவித்துள்ளனர். இந்தநிலையில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தை குறிப்பிட்ட வெடிபொருள்களைச் சாட்டாக வைத்து திட்டங்களை இல்லாமற் செய்யப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

எமது பிரதேசத்தில் ஒப்பந்தக்காரர்கள் போதியளவு இன்மையாலும் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களின் செயற்பாடுகள் துரிதமின்மையாலும் ஆரம்பிக்கப்பட்ட கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியடையாத நிலையிலுள்ளன.

அவைகளுக்கு வரும் தளபாடங்களும் திருப்பி அனுப்பப்படுகின்றன.

எனது செயலகம் ஒருவரது வீட்டில் இயங்கி வருவதால் பல இன்னல்கள் எதிர்நோக்கப்படுகின்றன. உரிய தளபாடவசதிகள் இல்லை. இடநெருக்கடி எனப் பல்வேறு இடர்களை அனுபவித்து வருகிறோம். எமக்கென ஒதுக்கப்பட்ட தளபாடங்களையும் குறைத்துக் கொள்கின்றனர்.




எனவே, இக்கட்டட வேலைகளைத் துரிதமாகச் செய்து முடிப்பதற்கு இப்பிரதேசத்திலுள்ள கமக்கார அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பனவற்றிலுள்ள உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்கி எமது பிரதேச நலன்களில் அக்கறை செலுத்தவேண்டும்.

ஒலுமடு, அம்பகாமம் ஆகிய கிராமங்களில் 2002 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்கள் இதுவரை முடிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, ஏனைய சில இடங்களின் வேலைத் திட்டங்கள் முடிவுககு வராத காரணத்தால் 2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் இல்லாமற்போகும் அபாயமும் ஏற்படும் நிலை உள்ளது.

இவ்வேலைகளைத் துரிதப்படுத்துவது கிராம அமைப்புக்களின் முக்கிய கடமையாகும் என்று தெரிவித்தார். (4-341)

## வரலாற்றுப் பாடமே இராமநாதபுரத்தில் அறிமுகமானது

வட்டக்கச்சி,ஜுலை24

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கு வரலாற்றுப் பாடம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழக் கல்விக்கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. இந்தப் பாடத்துக்கான அறிமுகவிழா கடந்த 8ஆம் திகதி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் வரலாற்றுப் பாடத்துக்கான அறிமுக உரையினை ஆற்றினார்.

இதுதொடர்பான கடந்த 21ஆம் திகதிய உதயனில் வெளிவந்த செய்தியின் தலையங்கத்தில் வரலாற்றுப் பாடநூல் அறிமுகமானது என்று அச்சுத்தவறு ஏற்பட்டுவிட்டது.(4-405)

# கல்மடுநகர் பாடசாலையில் புதிய கட்டடம் திறந்து வைப்பு

வட்டக்கச்சி,ஜுலை24

கல்மடு நகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 'யுனிசெவ்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் கடந்த 8ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது. பாடசாலை முதல்வர் சு.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கொடியினைக் கல்மடு இராமநாதபுரம் வலயப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கினைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. க.ம.பத்மநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து புதிய கட்டடத்தின் அலுவலகப்பகுதியினை 'யுனிசெவ்' நிறுவனப் பிரதிநிதி பெனிபுறுனும், வகுப்பறைப்பகுதிகளை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான கி.சின்னராசா, க.ம. பத்மநாதன், பாடசாலை முதல்வர் சு.இரவீந்திரன் ஆகியோரும் திறந்து வைத்தனர்.(4-405)

# நாய்களின் தொல்லை அதிகரிப்பு

பரந்தன்,ஜுலை24

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை, கரைச்சி, பளை, கிளிநொச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றன.

இப்பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களால் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதால் உயிரிழப்புக்களும் அங்கவீனப்படுவதும் அதிகரித்துள்ளது. நாய்களுக்குப் பயந்து மாணவர்களைத் தனியாகப் பாடசாலைகளுக்கு அனுப்பாது பல பெற்றோர்கள் தாங்களே பிள்ளைகளைக் கூட்டிச் செல்வதையும் காணமுடிகின்றது.

கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்காமல் பாராமுகமாக இருக்கின்றனர் என்று மக்கள் விசனமடைகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனத்துடன் நாய்களின் தொல்லைகளிலிருந்து மக்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (4-352-203)

# வாகனம் மீளப்பெறப்பட்டதால் நோயாளர்கள் பெருஞ்சிரமம்

பரந்தன்,ஜுலை24

கண்டாவளைப்பிரிவு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்துக்கு அதன் கிளநொச்சி மாவட்டத் தலைமையகத்தால் வழங்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று மீளப்பெறப்பட்டு இன்னமும் பதிலாக அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்படாததால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இதற்குப் பதிலாக அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்படும் என்று கூறப்பட்டபோதிலும் நீண்டகாலமாக அது வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தர்மபுரம் அரசினர் வைத்தியசாலையில் ஒரு அம்புலன்ஸ் வண்டி சேவையில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் அது மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களைத் தர்மபுரம் ஆஸ்பத்திரியிலிருந்து வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றும் நடவடிக்கைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால், தேராவில் தொடக்கம் பரந்தன் வரையுள்ள கிராமங்களில் உள்ள நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு வாகன வசதிகள் இன்றிச் சிரமப்படுவதைக் காண முடிகிறது. (4-352)

# விசர்நாயினால் கடியுண்ட சிறுமி ஏற்பூசி இல்லாததால் மரணம்!

புதுக்குடியிருப்பு,ஜுலை24

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் விசர்நாய்க்கடித் தடுப்பு மருந்து இல்லாமையினால் சிறுமி ஒருத்தி அண்மையில் பரிதாபகரமாக உயிரிழந்தார். விசர்நாயினால் கடியுண்ட முல்லைத்தீவு, மாத்தளன் கிராமத்தைச் சேர்ந்த நீக்கலஸ் மேரி அனுஷா என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் விசர்நாய்க்கடிக்கான ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்து இல்லை என்று தெரிவிக்கப்படுகினறது.

விசர்நாய்க்கடிக்கு இலக்கான இந்தச் சிறுமிக்கு ஏற்புத்தடை மருந்து ஏற்றப்படவில்லை என்றும் - அதனாலேயே சிறுமி உயிரிழக்க நேரிட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (4-7-353)

# கமக்காரர் சம்மேளனக் கட்டடத்துக்கு அடிக்கல்

பரந்தன்,ஜுலை24

வட்டக்கச்சி இராமநாதபுரம் கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் அண்மையில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள அரச காணியில் நட்டுவைக்கப்பட்டது.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டக்கச்சிப் பிரதேச இணைப்பாளர் ச.லொயிட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

மங்கள விளக்கினைக் கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.இராசலிங்கம் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

·தமிழீழத் தேசியக்கொடியினை வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கதிர்நேசன் ஏற்றிவைத்தார். (4-5-352)

## அடகு நகைகளை மீளப்பெறலாம்

புதுக்குடியிருப்பு,ஜுலை24

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் அடகுவைத்த தங்க நகைகளை, அலுவலக நேரங்களில் மக்கள் வங்கிக்கிளையின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய கிளைகளில் மீளப்பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4-353)

## கண்டாவளையில் 8 பேருக்கு தற்செயல் நிவாரணம்

விசுவமடு,ஜுலை24

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு, மயில்வாகனபுரம், கோரக்கன்கட்டு, கல்மடு நகர், தருமபுரம் ஆகிய கிராமங்களில் தற்செயல் நிவாரணம்பெற 8 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தற்செயல் நிவாரணமாக ஒவ்வொருவருக்கும் தலா 7 ஆயிரம் ரூபா வழங்க சமூக நலத்துறைத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. (4-402)

## நூல்கள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஜுலை 24

இராமநாதபுரம் மகாவித்தியாலய நூலகத்திற்குத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் வரலாற்று நூல்கள் உட்படப் பல அரிய நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அண்மையில் இந்தப் பாடசாலையில் வரலாற்றுப் பாட அறிமுகவிழாவில் கலந்து கொண்டபோதே இந்த அன்பளிப்புக்களை வழங்கினார். (4-405)

## பஸ்சேவை நேரத்தில் மாற்றம்

மல்லாவி,ஜுலை24

மல்லாவிப் பிரதேச அரச ஊழியர் நலன் கருதி தமிழீழப் போக்குவரத்துக்கழகத்தால் வெள்ளிக்கிழமைதோறும் பிற்பகல் 1.30 மணிக்கு நடத்தப்படும் மல்லாவி - முகமாலை பஸ் சேவை பலரது வேண்டுகோளுக்கிணங்க வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மல்லாவி பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் எனத் தமிழீழப் போக்குவரத்துக்கழகத்தினர் அறிவித்துள்ளனர். (4-322)

## கண்டாவளைப் பிரிவில் வீதிகள் புனரமைப்பு

விசுவமடு,ஜுலை24

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பரந்தன், 3ஆம் மதவடி, புன்னைநீராவி, கோரக்கன்கட்டு, பிரமந்தனாறு, முரசுமோட்டை ஆகிய கிராம வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. உலக உணவுத்திட்டத்தின் நிதியுதவியுடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. (4-402)

# ஆரம்ப சுகாதார நிலையம் விசுவமடுவில் திறக்கப்பட்டது

விசுவமடு,ஜுலை24

'யுனிசெவ்' நிதியுதவியுடன் விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 21ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.


விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் சதானந்தன், கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புக் குழுத் தலைவி திருமதி காசிநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

சுகாதார நிலையப் பெயர்ப்பலகையினைப் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஜெயகுலராஜா திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தினை 'யுனிசெவ்' பிரதிநிதி சிறாக்கோ திறந்து வைத்தார்.

வரவேற்புரையினைக் கிராம சேவையாளர் தேவகி, சிறப்புரைகளைப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் செ.தயானந்தா, டாக்டர் ஜெயகுலராஜா, 'யுனிசெவ்' பிரதிநிதி சிறாகசோ ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்விற்கு மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். (4-402)




விசுவமடுப் பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பெயர்ப்பலகையினை வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா திரைநீக்கம் செய்வதை முதலாவது படத்திலும் - நிலையக் கட்டடத்தினை 'யுனிசெவ்' அமைப்பின் பிரதிநிதி சிறாக்கோ நாடாவெட்டித் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: விசுவமடுச் செய்தியாளர்)*

## விற்பனைக்குண்டு

அச்சுவேலி மடத்தடி, சனசமூக நிலையத்துக்கு முன்னால் உடையார் வளவு 'வீடும் வளவும்' 25 பரப்புக் காணியும், 48 பரப்புத் தோட்டக்காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: ஆ.ஜெயபாலன்,
பருத்தித்துறை வீதி,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
T.P:0602212832.

## கொழும்பு றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடத்தும் அகில இலங்கை சமயத்திறன் காண் போட்டிகள் - 2004

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் 49ஆவது தட வையாகக் கலைத்தாய்க்கு மகுடம் சூட்டும்முகமாக நடத்தும் கலைமகள் விழா - 2004இனை ஒட்டி சமயத்திறன் காண் போட்டிகளை நாளை (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை நவரங்கஹல மண்டபத்தில் நடத்த எண்ணியுள்ளது.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
செயலாளர்,
றோயல் கல்லூரி இந்துமாணவர் மன்றம்,
றோயல் கல்லூரி, கொழும்பு - 07.
தொலைபேசி:
011271377, 0785 120400

(சி-36062) (24-19-34)

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் மேற்படி கண்காட்சியில் இடம்பெறுவதற்காகப் புதிய வரவாகப் பல்வேறுபட்ட இந்திய வெளியீடுகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன என்பதையும் சனி, ஞாயிறு வாரஇறுதி நாள்களிலும் வழமை போல் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-36319)(29-19-34)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராஜா பொன்னம்மா



வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா பொன்னம்மா (20-07-2004) செவ்வாய்க் கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் முத்துத்தம்பி - லட்சுமிப்பிள்ளையின் அன்பு மகளும் நடராஜாவின் அன்பு மனைவியும் தயாபரன், அமரர் சிவபரன் மற்றும் நிருபரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரிதேவி (சங்கானை), ஜெயராணி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் தாரணி, தயானி (கனடா), தாட்ஷாயினி, துஷ்யந்தினி (கனடா), ஹரிஷாந், ஹரிபிரஷாத் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-07-2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. (34423)(42-34-13-17)

- தகவல்:
சி.நடராஜா (கணவர்).

### கிறகோரி சிப்பிரியான் (குணா)



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் இல.9/1, மத்தியகிழக்கு வீதி, குருநகரை வதிவிடமாகவும் கொண்ட கிறகோரி சிப்பிரியான் (குணா) 21-07-2004 புதன்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகோரி அக்கினேசின் அன்பு மகனும் சவிரியான் செல்லம்மாவின் மகளாகிய பிறிச்சேட்டின் பாசமிகு கணவரும் றஞ்சனா, சுபா, விக்னராஜ (இத்தாலி), சுலக்ஷனா ஆகியோரின் அன்புத் தந்தையும், றமேஸ் (பிரான்ஸ்), ஜெகன், சங்கீத் ஆகியோரின் மாமனாரும் கதீர்னா, திவிகரன் ஆகியோரின் பேரனும் G.P. பேர்மினஸ் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், சிறைசாலைத்திணைக்களம்-திருமறைக்கலாமன்றம்) காலஞ்சென்ற றீற்றம்மா, காணிக்கைமரியை (றோஸ்), அல்போன்ஸ், அமிர்தம், றேமன் (இந்தியா), ராஜன், யஸ்ரின், மேசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கம், காலஞ்சென்ற அஞ்சலா, பிறின்ஸ், உதயன், ஜான்சிராணி, காலஞ்சென்ற ஜெயா, ரஜனி, ராஜன (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2004) சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெற்று, அன்னாரின் இல்லத்திலிருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் அருட்கலாநிதி.R.ஜெயசீலன் அடிகளால் திருபலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
சி.பிறிச்சேட் (மனைவி).

9/1, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். T.P.:4590195.

(34421)(34-13-17)

# கனேடிய மாகாணத்தில் கரும்புலிகள் நினைவு நிகழ்வு

கனடா கியூபெக் மாகாணக் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் கரும்புலிகள் நினைவாக 'உறுதிப்பூக்கள் 2004' நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி லூசியன் பேஜ் பாடசாலைக் கலையரங்கில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக்கொடி, கனடியத் தேசியக்கொடி, கியூபெக் மாகாணக் கொடி ஆகியவை ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. மேற்படி வைபவத்தில் மாவீரர்களுக்கும் இலங்கை, இந்திய இராணுவத்தினரின் நடவடிக்கைகளில் உயிரிழந்த பொது மக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அடுத்து, கரும்புலி மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், 196 கரும்புலி மாவீரர்களின் திருவுருவப் படங்களைக் கொண்ட நினைவாலயமும் திறந்துவைக்கப்பட்டது.

தொடர்ந்து, மதுராலயா, கலைப்பிரியர்கள், கலைநெறிக் கல்விக்கழகம் மற்றும் ஸ்வராலயா ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களின் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'நம்பிக்கைத் துரோகம்' நாடகம் யோ.ரட்ணகுமார் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்டது. லெப்.கேணல்தூயவன் நினைவாக கியுபெக் சிலம்பம் அமைப்பினால் பொங்குதமிழ் இசைத் தட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஒ-201)

## திருமலையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம்

திருமலை,ஜுலை24

வடக்கு - கிழக்கு மாகாணச் சுகாதார அமைச்சின் செயலாளர், கந்தளாய் ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் ஆகிய இருவரையும் இடமாற்று மாறுகோரி, நேற்று முனதினம் திருகோணமலையில் ஆர்ப்பாடடம் ஒன்று இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் திருமலை அலுவலகத்திற்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஜே.வி.பி. ஆதரவாளாகள் உட்படச் சுமார் இருநூறுபேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் அத்தியட்சகராகப் பதில் கடமையாற்றுபவர் அப்பதவிக்கு எவ்வகையிலும் பொருத்தமற்றவர் எனறும் -

அவரது குற்றச் செயல்களைக் கண்டிக்காது, தொடர்நதும் அவரைக் கடமைக்கு அனுமதித்திருக்கும் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் முறையற்ற விதத்தில் நடந்துகொள்கிறார் என்றும் -

ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் சுலோகங்களை ஏந்தியவாறு அவ்விருவரையும் உடனடியாக இடமாற்றுமாறு கோஷமெழுப்பினர்.

(க)

## விற்பனைக்குண்டு

நகை வேலைக்குரிய அப்பலோ கட்டிங் மெசின், காப்பு வளைக்கும் மெசின், விளிம்பு மடிக்கும் மெசின், கோபாஸ் தராசும் உண்டு.

தொடர்பு: E.S.K.,
272, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(34425)(42-34-13-17)

## TITA வின்

இலவச கணனிப் பயிற்சி

கணனி அறிமுகம்
ஆரம்பம்: நாளை (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 (மு.நே.)
இடம்: இளந்தாரி கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவில்.
(34409) - நிர்வாகம.

## இராவணேஸ்வரன் இந்திர உலா நூல் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை24

பேரறிஞர் பாலசுப்பிரமணியத்தின் 'இராவணேஸ்வரன் இந்திர உலா' (இராவணன் வரலாறு) நூல் ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூல் முதற்பிரதியை தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.சிவமகாராசா பெறுவார்.

ஆய்வுரைகளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பதமினி சிதம்பரநாதன், காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவர்.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரையையும், பேரறிஞர் வைத்தியகலாநிதி க.பாலசுப்பிரமணியம் ஏற்புரையையும் நிகழ்த்துவர்.

(8-204)

## உடன் தேவை

நாதன்ஸ் தொலைத் தொடர்பு/ கணனிப் பதிப்பகம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

★ இரவு வேலைக்கு தொலைபேசி. இயக்குநர் தேவை.
★ கணனிவேலை தெரிந்த பெண் தேவை.

(சி-36318)

## கேள்வி அறிவித்தல்

### வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரினால் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அலலது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல | பாடசாலையின் பெயரும் வேலைவிவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| I | யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம் வகுப்பறை திருத்தல் | 250.00 | 2,400.00 | எம் 8 |
| II | யா/நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க.பாடசாலை வகுப்பறை திருத்தல் | 250.00 | 3,900.00 | எம் 8 |
| III | யா/மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம் வகுப்பறை திருத்தல் | 250.00 | 3,400.00 | எம் 8 |
| IV | யா/சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம் வகுப்பறை திருத்தல் | 250.00 | 2,550.00 | எம் 8 |
| V | யா/வட்டு கார்த்திகேய வித்தியாலயம் | 250.00 | 2,750.00 | எம் 8 |

01. அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08 ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
ஆ) பாடசாலை அபிவிருத்திச்சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி அ இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்கமுடியாத வைப்புப்பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 26.07.2004 ஆம் திகதியிலிருந்து 30.07.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு, ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல்வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 3 மாதகாலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்,
2004.07.22

திருமதி றெ.இருதயநாதன்,
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.

(C-36317)(34-19)

# நெல்லிரச உற்பத்தியில் முத்திரை பதிக்கும் 'ஹேமா'

குடாநாடு காலங்காலமாக நெல்லிரசத் தயாரிப்பில் புகழ்பெற்றுள்ளது. நெல்லிக்காய்களிலிருந்து உடலுக்கு உற்சாகமளிக்கும் அதே வேளை அருமருந்தாகவும் ஊட்டமளிப்பது நெலலிரசமாகும். இந்த நெல்லிரச உற்பத்தியில்



'ஹேமா' இன்டஸ்றீஸ் நிறுவனத்தில் பானம் போத்தலில் அடைக்கப்படுகின்றது.

'ஹேமா இன்டஸ்ரீஸ்' நிறுவனம் தற்போது முத்திரை பதித்துள்ளது.

தரமான நெல்லிக்காய்களைத் தெரிவுசெய்வதிலும் அவற்றைப் பதப்படுத்தி நெல்லிரசம் தயாரிப்பதிலும் 'ஹேமா' நிறுவனம் முழுஅக்கறை செலுத்துவதால் அதன் நெல்லிரசம் மக்களிடையே தனிப்பெயர் பெற்றுள்ளது.

காலத்தின் தேவை அறிந்து நுகர்வோரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்படும். நெல்லிரசம் ஆக இன்று சந்தைப்படுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம், வன்னி, வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் 'ஹேமா' நெல்லிரசம் முதன்மை பெறுவதற்கான காரணங்கள் அதன் உற்பத்திக் கலவை நீண்டகால பழுதடையாத் தன்மை, சுவை, தரம் ஆகியவை என்று கூறுகிறார் 'ஹேமா இன்டஸ்றீஸ்' இயக்குநர் எஸ். சுரேஸ்.

ஹேமா இன்டஸ்ரீஸ் பழக்கலவை கோடியல், ஊறுகாய், சோஸ், ரசப்பொடி என்பவற்றைத் தயாரித்து சந்தைப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளதாகவும் -

அந்த வரிசையில் 'ஹேமா' தயாரிப்பான நெல்லிரசம் இன்னுமோர் தயாரிப்பாகும் என்றும் -

அவர் மேலும் கூறினார்.

'நாக சக்தி' என்ற வர்த்தகக் குறியீட்டுடன் சந்தைப்படுத்தப்படும் 'ஹேமா இன்டஸ்றீஸ்' தயாரிப்புகளில், நெல்லிரசம் 625 மி.லீ மற்றும் 750 மி.லீ. என இரண்டு அளவுகளில் விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச தரத்திற்கு ஒப்பான வகையில் நவீன கருவிகளைக்கொண்டு உற்பத்தியை மேற்கொண்டுவரும் ஹேமா இன்டஸ்றீஸ் தொழிற்சாலை வவுனியாவிலும் - நவாலியிலும் செயற்பட்டுவருகின்றது.

இந்த நிறுவனத்தின் நோக்கம் - அதன் இலக்குமாக இருப்பது நாடளாவிய ரீதியில் விற்பனை செய்து எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி நோக்கிய சந்தை வாய்ப்பை கொண்டது என அதன் இயக்குநர் எஸ்.சுரேஷ் தெரிவித்துள்ளார்.

# 'எஸ்லோன்' பரிசளிப்பு விழா


குடாநாட்டில் பணிபுரியும் எஸ்லோன் குழாய் பொருத்துநர் கழகத்தின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள 'லஷ்மி' குழுமம் அலுவலகத்தில் இந்தப் பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது.

குழாய் பொருத்துநர்களின் திறமையை விருத்தி செய்யும் நோக்குடன் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எஸ்லோன் நிறுவனம் போட்டி ஒன்றை நடத்துகின்றது.

இதில் வெற்றிபெற்றோர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் இந்நிறுவனத்தின் யாழ்.பிரதேச முகாமையாளர் ரி.ரவீந்திரன், பொருள் அபிவிருத்தி முகாமையாளர் வி.மகாதேவன் ஆகியோர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

ரி.பகீரதன் முதலாவது பரிசாகப் பத்தாயிரம் ரூபாவையும், எஸ்.தேவதாஸ் இரண்டாவது பரிசாக 7 ஆயிரத்து 500 ரூபாவையும், எஸ். றெமேனா மூன்றாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாவையும் பெற்றனர். ஆறுதல் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஒ-3)



குடாநாட்டில் பணிபுரியும் எஸ்லோன் குழாய் பொருத்துநர் கழகம் திறமையான குழாய் பொருத்துநர்களைத் தெரிவுசெய்து பரிசு வழங்கியது. இப்பரிசளிப்பு விழாவில் முறையே எஸ்லோன் நிறுவனத்தின் யாழ்.பிரதேச முகாமையாளர் ரி.ரவீந்திரன் முதல் பரிசுபெற்ற ரி.பகீரதனுக்கும் பொருள்அபிவிருத்தி முகாமையாளர் வி.மகாதேவன் இரண்டாம் பரிசு பெற்ற எஸ்.தேவசதாஸுக்கும் பரிசுகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்: தேவா

# மாதந்தோறும் 325 தங்கப்பவுண் பரிசாக வழங்கும் மக்கள் வங்கி

ஏறத்தாழ நான்கு தசாப்த காலத்துக்கும் மேலாக இலங்கை மக்களின் நம்பிக்கையை உச்ச மட்டத்தில் வென்றெடுத்த வங்கியாக மககள் வங்கி உள்ளது. 1961 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட மக்கள் வங்கி, இந்த நாட்டு




மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தது. நாடு தழுவிய 325 கிளைகளைக் கொண்ட மக்கள் வங்கியின் கீழ் 188 அடகு மற்றும் சேமிப்பு நிலையங்களும், 81 சேவைக் கரும பீடங்களும் இயங்கிவருகின்றன.

**'சிசு உதான'**

சின்னஞ்சிறு சிறார்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'இசுறு உதான' கணக்கின் மூலம் கவர்ச்சிகரமான வட்டி வீதத்தையும் ஆயுள் மற்றும் காப்புறுதியையும் மக்கள் வங்கி வழங்குகின்றது.

பிள்ளைக்கு 5 வயது பூர்த்தி அடைந்ததும் இன்னும் பல சிறப்பான நன்மைகளையும் பிளளைக்கு உரித்தாக்கியவாறு 'இசுறு உதான' கணககானது தானாகவே 'சிசு உதான' கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

நூறு ரூபா போன்ற ஒரு சிறிய தொகையைக் கொண்டு ஆரம்பிக்கப்படக் கூடிய இந்தக் கணக்கின் மூலம் புலமைப் பரிசில் கொடுப்பனவுகளும், ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்திபெறுபவர்களுக்கான விசேட கொடுப்பனவு ஒன்றும் காப்புறுதிப் பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது.

இந்த முறையின் மூலம் பாடசாலைகளின் மாணவ மணிகள் சேமிப்புப் பழக்கம் குறித்தும், வங்கி முறைமை குறித்தும் சிறந்த புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

**'ஜெஸ் கணக்கு'**

'சிசு உதான' கணக்கை அவர்கள் 18 வயதாகும்போது YES (Young Executive Saving Account) கணக்கிற்கு மாற்ற முடியும். YES கணக்கின் மூலம் ரூ.25 ஆயிரம் அல்லது அதனை விடக கூடுதலான சேமிப்புத் தொகைகளுக்காக நூற்றுக்கு ஒரு சதவீதம் என்ற அடிப்படையில் போனஸ் வட்டி வீதமொன்றையும் ரூபா ஆயிரத்துக்கும் அதிகமான சேமிப்புத் தொகைகளுக்கு வட்டித் தொகையொன்றையும் இலவச தன்னியக்க ரெல்லர் இயந்திர அட்டை, கடன் அட்டை, ரூபா ஒரு லட்சம் வரையிலான காப்புறுதி உடபடப் பல விசேட நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

முதற்தடவையாக மக்கள் வங்கி பெண்களுக்காக 'வனிதா வாசனா' எனும் கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தக் கணக்கின் மூலம் பெண்களின் தேவைகளையும் விட அதிகமான பல்வேறு நன்மைகளும் கிட்டுகின்றன.


'ஜனஜய' எனும் சேமிப்புத் திட்டம், மக்கள் வங்கியின் சேமிப்புத் திட்டங்களில் மிகவும் பிரசித்தமானதாகும். 18 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒருவரும் அந்தக் கணக்கை ஆரம்பிக்க முடியும். குறைந்தபட்சம் 2 ஆயிரம் ரூபாவை இந்தக் கணக்கின் கீழ் வைப்பிலிட முடியும். 'ஜனஜய' கணககின் மூலம் காப்புறுதித் திட்டமொன்றும் கடனுதவித் திட்டமொன்றும் உரித்தாகும். வீடமைப்புக்கும், திருமண விடயங்களுக்கும், கல்வி மற்றும் வியாபாரத் தேவைகளுககும் கடன் தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் வசதியும் இதன் கீழ் கிட்டுகின்றது. அத்துடன், முற்றிலும் இலவசமாக மக்கள் வங்கியின் 'ஸ்மார்ட் கேஷ்' அட்டையொன்றும் சலுகை விலையில் 'பீஎ்ஸ் விஸா' அட்டையொன்றும் வழங்கப்படுகின்றது.

முதல்தடவையாக சிரேஷ்ட பிரஜைகளுக்காக 'பரிணத' என்ற பெயரில் ஒரு கணக்கையும் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. ஏனையை வங்கிக் கணக்குகளை விட அதிகமான வட்டி வீதம் 'பரிணத' கணக்குகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தக் கணக்கில் 5 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான நிலுவைத் தொகையொன்று காணப்படுமாயின் ஒரு சதவீத மிகை வட்டி வீதமும் ஒரு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த 'பரிணத' நிலையான வைப்புக்கணக்கொன்றை பேணி வருபவராயின், 8 சதவீத விசேட வருடாந்த வட்டி வீதமும் உரித்தாகும். இதற்குப் புறம்பாக, இந்தக் கணக்கைப் பேணி வருபவர்களுக்காக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான இலவச சேவையும் வழங்கப்படும்.

**பி.வி.பத்திரன**
**பிரதிப் பொதுமுகாமையாளர்,**
**மக்கள் வங்கி.**

மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு சேமிப்புத் திட்டத்தையும் உள்ளடக்கும் விதத்தில் "ஜயசிறி" பரிசூதியத் திட்டம் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். நீங்கள் மக்கள் வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கைப் பேணி வருபவராயின், ஒருமாத காலம் முழுவதும் 10 ஆயிரம் ரூபாவும், நடைமுறைக் கணக்கின் மாதாந்த நிலுவை 5 ஆயிரம் ரூபாவைவிட அதிகமாகவும், அமையுமாயின், தானாகவே "ஜயசிறி" பரிசூதியப் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள். மாதாந்த "ஜயசிறி" பரிசூதிய சீட்டிழுப்பின் மூலம் நாடு தழுவிய 325 கிளைகளிலிருந்து வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதாந்தம் அவர்களுக்கு 325 தங்கப் பவுண்கள் பரிசாக வழங்கப்படும். இதற்குப் புறம்பாக, மக்கள் வங்கியின் 11 பிராந்தியங்களுக்கும் "ஜயசிறி' பரிசூதியத் திட்டத்தின் கீழ் முறையே ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒரு லட்சம் ரூபா என்ற அடிப்படையிலும் மாதாந்தத் தொகையாக 11 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும். ஆண்டிறுதியில் நடைபெறும் மாபெரும் சீட்டிழுப்பின்போது முதல் பரிசை வென்றெடுக்கும் அதிர்ஷ்டசாலி ரூபா 50 லட்சம் பெறுமதியான 'ஜகுவர்' வகை அதி சொகுசு மோட்டார் வாகனமொன்றை அல்லது உடன் காசாக ரூபா 50 லட்சத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆண்டிறுதியில் இரண்டாவது பரிசுத் தொகையாக ரூபா இருபது லட்சமும், மூன்றாவது பரிசுத் தொகையாக ரூபா பத்து லட்சமும் வழங்கப்படும்.

இந்த அதி விசேட பரிசுகளை வென்றெடுப்பதற்காக, தமது நடைமுறைக் கணக்குகளில் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய 03 மாதங்களிலும் தொடராக வைப்புத் தொகைகளைப் பேணி வரும் அனைவரும் இந்தப் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.




**இலங்கைத் தேசியத் தொழிற் சம்மேளனத்தின் 2004 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு வைபவத்திலும் 'சார்க்' நாடுகளுக்குள் இலங்கையரின் சிறந்த தொழில் மேன்மைக்கான விருதை இன்டோ ஸ்ரெயின் லெஸ் (Indo Stainless Fabtech) நிறுவனம் தனதாக்கிக்கொண்டது.**

**இப்பளிங்கு விருதானது தொடர்ச்சியாக மூன்று வருடங்களாகத் தங்க விருதுகளை இந்நிறுவனம் பெற்றமையால் வழங்கப்பட்டது.**

**யாழ்ப்பாணத்தில் கடந்த 27 வருடங்களாக இயங்கி வரும் புறோமோட்டோர்ஸ் நிறுவனத்தின் துணைநிறுவனமான இன்டோ ஸ்ரெயின்லெஸ் பப்ரெக் இந்தியாவில் கடந்த ஒன்பது வருடங்களாக இயங்கிவருகின்றது.**

**இவ்விருதினை மேற்படி ஸ்தாபனங்களின் நிர்வாக இயக்குநர் ந.சிவகுமாரன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவிடமிருந்து பெற்றுக்கொண்டார்.**

# தரமான கோழிக்குஞ்சுகள் உள்ளூரில்

அச்சுவேலி,ஜூலை 24

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிக் குஞ்சுகள் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் அச்சுவேலி கைத தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளில் சேவல் குஞ்சு 5 ரூபா வீதமும் இறைச்சி இனக் கோழிக்குஞ்சு (புறொயிலர்) 40 ரூபா வீதமும் முட்டை இடும் இனக்குஞ்சு 50 ரூபா வீதமும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

கோழிக்குஞ்சுகள் தேவைப்படும் பொதுமக்கள், பண்ணையாளர்கள் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புகொண்டு குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடைவைக்கும் இயந்திரம் மூலம் உற்பத்தியான இக்குஞ்சுகள் கடந்த மாதம் 27 ஆம் திகதி பெறப்பட்டன. தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு ஒரு தடவை என்ற ஒழுங்குமுறையில் ஒவ்வொரு தடவையும் சுமார் ஆயிரத்து 300 குஞ்சுகள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருககும் எனவும் கூறப்படுகின்றது.

நெதர்லாந்திலும் இந்தியாவிலும் இருந்து கொண்டுவரப்பட்ட தாய்க் கோழிகளில் இருந்து பெறப்படும் முட்டைகள் அடைவைக்கப்பட்டு கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

புங்குடுதீவு
சர்வமத சங்கத்தின் ஆதரவில் இயங்கும்

# பாலர் பாடசாலை விளையாட்டு விழாவும்
# பரிசளிப்பு வைபவமும்

காலம்: நாளை (25-07-2004) ஞாயிற்றுக்கிழமை
காலை 9.30மணி
இடம்: புங்குடுதீவு கிழக்கு 10ஆம் வட்டாரம்
(சங்கக்கிளை மைதானம்)

எமது சங்கம் தொடர்ந்து வட்டாரத்துக்கு ஒன்று என்ற ரீதியில் மேலும் பல பாலர் பாடசாலைகளை ஆரம்பித்து பாலர் கல்விக்குச் சேவைசெய்யும் நோக்குடன் இயங்க உத்தேசித்துள்ளது. தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் எமது சங்க ஆதரவுப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளலாம் என்பதை அறியத்தருவதோடு பாலர் பாடசாலைக்கான தகுதியுடைய ஆசிரியைகளும் பதவிக்கு விண்ணப்பம் செய்யலாம் என்பதையும் அறியத்தருகின்றோம். மிகவிரைவில் 2ஆம் வட்டாரம், 11ஆம் வட்டாரம் ஆகியவற்றில் கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. அடுத்ததாக 4ஆம், 5ஆம் வட்டாரங்களிலும் கிளைகளை ஆரம்பிக்க இருப்பதால் பாலர் பாடசாலைகள் இயங்குவதற்கான இடங்களையும் அவற்றுக்குரிய ஆசிரிய பதவி வெற்றிடங்களுக்கு ஆசிரியைகள் தேவை என்பதையும் அறியத்தருகின்றோம்.

**ஒவ்வோர் ஆசிரியைக்கும் தலா 2000/= ரூபா சம்பளமாக வழங்கப்படும்.**

இந்த விளையாட்டு விழாவில் பொதுமக்களும்
சகல பாலர் பாடசாலை மாணவர்களும்
ஆசிரியைகளும் பங்குகொள்ளுமாறு
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*10ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (34439)(42-13-17-24)

- சர்வமத சங்கத்தினர்.



# மகாஜன பழைய மாணவர் சங்க லண்டன் கிளை

# உதைபந்தாட்டச் சுற்றுலா – 2004

- இச்சுற்றுலாவின் நோக்கம் உதைபந்தாட்டப் போட்டிகள் சிலவற்றில் கலந்து கொள்வது என்பதல்ல.
- கொடிய போரினால் இங்கு பாதிக்கப்பட்டுள்ள சிறார்கள், புலம்பெயர்ந்து கஷ்டங்களை அனுபவிக்கும் இளம் சமுதாயத்தினரது யதார்த்தமான நிலைமைகளை நேரிற் கண்டறிதலாகும்.
- இங்கு எம்முடன் வந்துள்ள இளைஞர்கள் இங்குள்ள அவலநிலைமைகளை நேரிற் கண்டு, அந்த உணர்வலைகளைச் சுமந்துசென்று லண்டனில் வாழும் எமது இளம் தலைமுறையினர்களுக்கும் கையளிக்கச் செய்வது மற்றொரு நோக்கமாகும்.
- இந்நோக்கங்களை நிறைவேற்ற யாழ். மண்ணிலும், வன்னி மண்ணிலும் உதைபந்தாட்டத்தை ஆதாரமாகக் கொண்டு 42 பேர்களால் மேற்கொள்ளப்படும் ஓர் இலட்சியப் பயணம் இது.
- விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு நாம் உதவக் காத்திருக்கிறோம்.

## உதைபந்தாட்ட நிகழ்ச்சி நிரல்

| காலம் | எதிரணி | இடம் |
|---|---|---|
| 24.07.2004 சனி மாலை.4 மணி | யாழ். பல்கலைக்கழகம் | பல்கலைக்கழக மைதானம் |
| 26.07.2004 திங்கள் மாலை 4 மணி | முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணி | முல்லைத்தீவு மைதானம் |
| 27.07.2004 செவ்வாய் மாலை.4 மணி | கிளிநொச்சி மாவட்டத் தெரிவு அணி | கிளிநொச்சி மைதானம் |
| | ஏனைய ஆட்டங்கள் | |
| 30.07.2004 வெள்ளி மாலை.4 மணி | கம்பளை சஹிராக் கல்லூரி | கல்லூரி மைதானம் |
| 01.08.2004 ஞாயிறு மாலை.4 மணி | கொழும்பு சவுண்டேஸ் விளையாட்டுக் கழகம் | சுகததாஸ ஸ்ரேடியம் |
| 02.08.2004 திங்கள் மாலை 4 மணி | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | கல்லூரி மைதானம் |

மகாஜன பழைய மாணவர் சங்கம், லண்டன் கிளை.
(34419)(34)


# ஒலிம்பிக் போட்டிக்கான பாதுகாப்பில் அமெரிக்காவின் சிறப்புப்படை

எதென்ஸ்,ஜூலை24

எதென்ஸில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்புப் பணிகளுக்கு 6,750 கோடி இந்திய ரூபாவைச் செலவிடுகிறது கிறீஸ்.

ஒலிம்பிக் வரலாற்றில் இதற்கு முன்பாக இவ்வளவு தொகை செலவிடப்பட்டதில்லை.

400 அமெரிக்க சிறப்புப்படை வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கிறீஸின வேண்டுகோளையேற்று அமெரிக்கா வீரர்களை அனுப்ப சம்மதித்துள்ளது.

ஆனால், வீரர்களை, எங்கெங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

எதென்ஸ், கிரீட் தீவு அல்லது ஐரோப்பா ஆகிய இடங்கள் பரிசீலனையில் உள்ளன.

இது குறித்து கிறீஸ் அரசுடன் அமெரிக்க அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். அமெரிக்க சிறப்புப்படை வீரர்கள் தற்போது ஜேர்மனியில் உள்ளனர்.

வெளிநாட்டுத் தலைவர்களும் முக்கிய பிரமுகர்களும் தங்களது சொந்தப் பாதுகாவலர்களைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தடகள வீரர்களைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பும் கிறஸ் படைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (10)

# விளையாட்டு

## மேற்கிந்திய அணியுடனான முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி வலுவான நிலையில்!

லோட்ஸ்,ஜூலை24

இங்கிலாந்து - மேற்கிந்திய அணிகளுக்கு இடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

முதல் நாளன்று தமது முதல் இனிங்ஸிக்காகத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 391 ஓட்டங்களை எடுத்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ரெஸ்கோதிக்கும், ஸ்டாஸிம் களமிறங்கினர் 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரெஸ்கோதிக் ஆட்டமிழந்ததை அடுத்து றொபேட் கீ களமிறங்கினார். ஸ்டாஸிம் கீயும் இணைந்து மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். அணி 320 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஸ்டாஸ் 137 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணித்தலைவர் மைக்கல்வோகன், றொபேட் கீயுடன் இணைந்துகொண்டார். முதலாம் நாள ஆட்டத்தின் நிறைவில் றொபேட் கீ ஆட்டமிழக்காமல் 167 ஓட்டங்களையும் வோகன் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். (10)

## ஆசியக் கிண்ணக் உதைபந்தாட்டத்தில் இந்தோனேஷியாவை வென்றது சீனா

பீஜிங்,ஜூலை24

ஆசியக் கிண்ண உதைபந்துத் தொடரில் சீனா 5-0 என்ற கோல் கணக்கில் இந்தோனேஷியாவை வெற்றியீட்டியுள்ளது.



பதினாறு அணிகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணக் உதைபந்துத் தொடர் சீனாவில் நடந்துவருகிறது. பீஜிங் நகரில் கடந்த புதன்கிழமை நடந்த லீக் சுற்றில் சீனா அணி இந்தோனேஷியாவை எதிர்த்து விளையாடியது.

இதில் பலமிக்க அணியான சீனா 5-0 என்ற கோல் கணக்கில் இந்தோனேஷியாவை வீழ்த்தியது. இந்த அணியின் சயோ ஜியாயி இரண்டு கோல்களும், ஹய்டங், லீமிங், லீயை ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

கடைசி லீக் சுற்றில் சீனா கட்டார் அணியை எதிர்த்து விளையாடவுள்ளது. (10)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நிறுவனத்தின் பயனாளிகளுக்கான விளையாட்டு விழாவில் இன்று காலை 9.15 மணி தொடக்கம் 11.15 மணி வரையும் இலக்கம் 5, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழியிலும்- பிற்பகல் 1.45 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.எஸ். எய்ட் மிஷனின் பணிப்பாளர் கலாநிதி கரல் பேக்கரும் கௌரவ விருந்தினராக 'மோட்டிவேசன்' அறக்கொடை நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி இராணி சாமுவேலும் கலந்துகொள்ளவுள்ளனர். காலை 9.15 மணிக்கு அகவணக்கம் இடம்பெற்று 9.30 மணிக்கு சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி ஓட்டப்போட்டிகள் நடைபெறும்.

பிற்பகல் 1.45 மணிக்கு கொடியேற்றல் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து தடகள நிகழ்வுகள், உரைகள், பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தினால் ஹொக்கிச் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளவுளள விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

அளவெட்டி கும்பளாவளை கொம்பன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளித் தலைவர் செ.நம்பியாரூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி.ஶ்ரீசிவாவும், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சிவநேயனும், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சரவணபவனும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-13)

# வார இறுதியில் நடப்பவை

வலி.தெற்கு,ஜூலை24

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கணித, விஞ்ஞானப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. இன்று சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்த இப்போட்டிகள் இன்று இடம்பெறும் ஆசிரியர் தெரிவுப் பரீட்சை காரணமாக நாளை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-152)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, கல்லூரி சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி திருநாள் தொடர்பான சிறப்பு நிகழ்வுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை இந்து மன்றத் தலைவர் கு.ஸ்ரீசங்கர் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். இதில் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேலு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (ஒ-201)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

வடக்கு - கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய விளையாட்டு விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுதுமலை அம்மன் கோயில் முன்றிலில் இடம்பெறும்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ஜோ.ஜோன்சிங்கம் தலைமையில் விழா இடம்பெறும்.

யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த முன்பள்ளி விளையாட்டு விழாவில் நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்ப முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொள்வர். (ஒ-185)

★ ★ ★ ★

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் முன்பள்ளி சமாசமும் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் கலைவிழா வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நாளை காலை 9 மணியளவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா கலந்துகொள்வார். (ஒ-45)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவசக் கண்சிகிச்சை முகாமும் பொது மருத்துவ சிகிச்சையும் வல்வெட்டித்துறை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன.

இம்மருத்துவ முகாமில் எஸ்.எம்.பெர்னாண்டோ நிறுவனத்தினரால் கண் பரிசோதனை செய்யப்பட்டுக் கண்ணாடிகள் வசதியற்றோருக்கு வழங்கப்படும். (ஒ)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி கந்தரோடை சவாரித் திடலில் நடைபெறவுள்ளது. (ஒ-202-201)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செபமாலை மாதா ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வர்த்தகத் தொழில்துறை மன்றத்தின் தொழில் அபிவிருத்தியாளர் எஸ்.ஜே.செல்வராஜாவும் கௌரவிருந்தினர்களாக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன், பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு ம.பெ.ஞானரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

★ ★ ★ ★

தென்மராட்சி,ஜூலை24

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக அலையும் நாய்கள் இன்று பிடித்து அழிக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்திருக்குமாறு பொது சுகாதாரப் பரிசோதகர் மு.கர்ணன் அறிவித்துள்ளார். (ஒ-117)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்டச் செயலகத்தினால் நடத்தப்படும் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான பண்ணிசை வகுப்பின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் திருக்கணித பஞ்சாங்க அதிபர் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள், சைவக் குருமார் அர்ச்சகர் சபைத் தலைவர் சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள் ஆகியோர் ஆசியுரையினையும் தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி பிறப்பு இறப்பு பதிவாளர் க.மோகன ராஜலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் கா.கமலநாதன் சிறப்புரையினையும் நிகழ்த்துவர். (ஒ-6)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர் சங்கத்தினர் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பிரதேச செயலகத்தினூடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வுபெற்றோர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ்.பிரதேச செயலர் என்.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (ஒ-201)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அறிவொளி சனசமூக நிலையமும், பெற்றோர் ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளன.

அறிவொளி ச.ச.நிலையத் தலைவர் மரியநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ- 201)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

பாஷையூர் மதுரகவி நீ.மிக்கோர்சிங்கம் எழுதிய 'வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாட்டுக் கூத்து' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் ஆசியுரை வழங்குவார்.

முதற்பிரதியை அழகுமணி இயூஜின் பெற்றுக கொள்வார்.

யாழ்.மாவட்ட பொருளாதார சமூகசேவை நிறுவன இணைப்பாளர் மு.சின்னத்துரையினால் முன்னாள் கல்விப்பணிப்பாளர் சி.வேலாயுதம், திரு மறைக்கலாமன்றப் பிரதி இயக்குநர் யோ.ஜோணசன் ராஜ்குமார் ஆகியோர் பற்றிய விமர்சனங்கள் வழங்கப்படும்.

மேற்படி நிகழ்வில் ஐரோப்பிய நாடுகளில் நாட்டுக்கூத்துக்கலையை அறிமுகம் செய்த அழகுமணி இயூஜின் சூரியர் 'பைந்தமிழ் பாவலன்' என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்படுவார். (ஒ-190,201)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை ஆளுநர் சபைக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஆளுநர் சபைத் தலைவர் ஏ.ஞானதாசன் தலைமையில் இடம்பெறும் கூட்டத்திற்கு பேராயர் எஸ்.ஜெபநேசனும் கலந்துகொள்வார். (ஒ-185)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆதரவுடன் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இலத்திரனியல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி கருத்தரங்கில் பௌதிகவியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. (ஒ-201)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறியின் மூன்றாவது தொகுதி இன்றும் நாளையும் காலை 8.30 மணிமுதல் கேட்போர் கூடத்தில் நடைபெறுகின்றது. வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் 'நியாப்' நிதி உதவியுடன் இப்பயிற்சி நடைபெறுகிறது. (ஒ-139)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை24

சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டிலான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் 'சட்டமும் பெண்களும்' என்ற தலைப்பில் செல்வன் வி.எஸ்.நிரஞ்சன் (எல்.எல்.பி) உரையாற்றுவார். மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் மழைநீர் சேகரிப்புத் தொடர்பாகக் கருத்துரை வழங்குவார். (3)

# இந்திய அரசின் நிதி உதவியுடன் மற்றொரு மா ஆலை அமைக்கப்படும்

## 'பிறிமா' ஏகபோகத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

கொழும்பு,ஜூலை24

'பிறிமா' நிறுவனத்தின் ஏகபோக உரிமையைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்திய அரசின் உதவியுடன் மற்றொரு மா ஆலை அமைக்கப்படவுள்ளது.

காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்தார். இந்தத் திட்டத்துக்கென இந்தியா 10 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த நிதியுதவியில் 30 வீதத்தை நன்கொடையாகவும், எஞ்சிய 70 வீதத்தை இலகு கடன் அடிப்படையிலும் வழங்க இந்தியா இணங்கியுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது விவசாய அமைச்சரும் அவருடன் சென்றிருந்தார். அங்கு இந்திய விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் பயனாக இந்த உதவிகள் கிடைத்துள்ளன என அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்கா கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏற்கனவே, செய்துகொள்ளப்பட்ட - காலத்திற்கு உதவாத - ஒப்பந்தங்களினால் பிறிமா நிறுவனம் மா உற்பத்தியில் ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளது. மாவுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிக்கமுடியாத நிலையும் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனைச் சமாளிக்க இந்திய அரசின் உதவியுடன் மா ஆலை ஒன்று நிறுவப்படும்.

மேலும் இந்தியாவில் முதற்தர பால்மா உற்பத்தி நிறுவனமான 'அமுல்' பால்மா கூட்டுத்தாபனம் இங்கு பால்மா உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்க முன்வந்துள்ளது. முதல் ஒரு வருடகாலம் 'அமுல்' நிறுவனமே இந்த நிறுவனத்தை நிர்வகிக்கும். அதன்பின் இலங்கை மக்களுக்கு இத்தொழிற்சாலையை அன்பளிப்பாக வழங்கவும் 'அமுல்' நிறுவனம் முன்வந்துள்ளது எனவும் அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ஒ)

# கொழும்பு - கொச்சின் இடையே பயணிகள் கப்பல் சேவை விரைவில்

கொழும்பு,ஜூலை24

கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவைக்கு மாற்றீடாக கொழும்புக்கும் கொச்சின் துறைமுகத்திற்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படும் என வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின்போதே இதற்கான இணக்கம் காணப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

நேற்றுமுன்தினம் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே. கொழும்புக்கும், தூத்துக்குடிக்கும் இடையில் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தபோதும் தமிழக அரசு, அதற்கு ஆட்சேபனை தெரிவித்து வந்தது. இதனால், இத்திட்டம் அமுல்படுத்தப் படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# நயினாதீவு பெருந்திருவிழாவில் தவறவிடப்பட்ட ஆவணங்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின்போது தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுக்கள் மற்றும் சில பொருள்கள் இதுவரை உரிமை கோரப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றை தவறவிட்டவர்களின் பெயர்களும், ஆவண விவரங்களும் வருமாறு:-

பூமணி ஐயாத்துரை, கைதடி (தே.அ.அ, விசேட அ.அ), தர்மசோதி ஜெயரூபன் உடுப்பிட்டி (வி.அ.அ), இராசேந்திரம் ஜெயராசா தாவடி (தே.அ.அ.), செல்வமலர் குணசேகரம் தெல்லிப்பழை (வி.அ.அ), பரமேஸ்வரன் கேதாரகௌரி, புங்குடுதீவு (தே.அ.அ.).

தங்கவடிவேல் ஜெயராணி, நெடுந்தீவு (வி.அ.அ.), அப்பையா இராசதுரை, கைதடி (தே.அ.அ.), தர்சிகா திருநாவுக்கரசு, வேலணை (வி.அ.அ.), குணசேகரம் தர்மினி, தெல்லிப்பழை (வி.அ.அ.) சிவனடியான் கலாநிதி, புங்குடுதீவு (தே.அ.அ.)

ஆர்.உதயகுமாரி ஸ்ரீவோதயம், பண்ணை (அ.அ), இராசலிங்கம் ஸ்ரீகாந்தன் (29937 அ.அ.படிவம்), கந்தசாமி குணலிங்கம் (4603894 அ.அ.படிவம்), நடேசபிள்ளை மகேஸ்வரி (037206 அ.அ.படிவம்), ஆர்.ரகுமார், அக்கராயன் குளம் (கிராம அலுவலர் அ.அ.), விஜயபாலன் ராஜ்மோகன், யாழ்ப்பாணம் (கடவுச்சீட்டு).

இவற்றைத் தவறவிட்டவர்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயப் பணிமனையுடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிறைவேற்று அலுவலர் நா.யோகநாதன் தெரிவித்துள்ளார். (ஒ-201)

# தேவன் சிறுகதைகள் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ஈழத்தின் மூத்த படைப்பாளி தேவன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான தேவன் - யாழ்ப்பாணம் சிறுகதைகள் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கலாநிதி க.குணராசா தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

புத்தொளி நா.சிவபாதம் வரவேற்புரையையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையையும், மூதறிஞர் எஸ். சிவராமலிங்கம் நட்புரையையும், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் வெளியீட்டுரையையும், சோ.பத்ம நாதன் மதிப்புரையையும் நிகழ்த்துவார்கள்.

நூலின் முதற்பிரதியைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக்கொள்வார். (ஒ)



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கணனிக் கற்கை நிலையத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் தேவமனோகரன் சுவாமிநாதன் கணனி நிலையத்தைத் திறந்து வைக்கிறார். சிறப்புவிருந்தினரும் ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தரப் பிரதிநிதியுமான சார்ளி மகேந்திரன், கல்லூரி அதிபர் க.ஜெகநாதன், கணனிக் கல்வி விரிவுரையாளர் எஸ்.செல்வதாஸ் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் கடமைபுரியும் ஆசிரியை
**திருமதி சுசிலாதேவி விஜயவரதன்**
அவர்களின் அன்புத் தந்தையார்.

## தில்லையம்பலம் நடராஜா

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மந்துவில் றோ. க. த. க. வித்தியாலயம்,
மந்துவில், கொடிகாமம்.
(சி.36333)(40-12-17)

## மயிலங்கூடல் ஞான வைரவர் ஆலய பொதுக்கூட்ட அறிவித்தல்

அன்புடையீர்,

மேற்படி ஆலய மகா கும்பாபிஷேகம் செய்வதற்கான நாள் எடுப்பது பற்றி அடியார்களின் கருத்துக்களை அறிவதற்கான கூட்டம் 25.07.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் ஆலய முன்றிலில் நடைபெற இருப்பதால் அனைத்து அடியார்களையும் தவறாது சமுகம் தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்
(34450)(40-12-17)

## இணுவில்-தாவடி வர்த்தக சங்க அறிவித்தல்

இணுவில் - தாவடி வர்த்தக சங்க அங்கத்தினர். அனைவரும் இன்று (24.07.2004) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு-மண்டபத்தில் நடைபெறும். யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளருடனான கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

- செயலாளர்.
(34442)(40)

# மரண அறிவித்தல்கள்

## சந்திரதாஸ் யசோதா



கொடிகாமம், கச்சாய் றோட், முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த செல்வி சந்திரதாஸ் யசோதா (யசோ) அவர்கள் நேற்று (23.07.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சந்திரதாஸ் - ராணி தம்பதிகளின் புத்திரி ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.07.2004) சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமத்திலுள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*வேளப்பள்ளம், மிருசுவில்.*
தற்காலிக முகவரி: *முதலாம் ஒழுங்கை, கச்சாய் றோட்,கொடிகாமம்.*

தகவல்:
வசந்தகுமார்
(சின்னவன் - சகோதரன்).
(34448)(34-40-12-17)

## குலபதி ஆறுமுகம் கந்தையா B.A.

(கைதடி சைவச்சிறுவர் இல்ல ஸ்தாபகரும் அஷ்டலஷ்மி நிறுவன உரிமையாளரும் சமாதான நீதிவானும்)



கைதடி கிழக்கைச் சேர்ந்த குலபதி ஆறுமுகம் கந்தையா 21.07.2004 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவமணி, காலஞ்சென்ற சிவகௌரி மற்றும் சிவகலா, சிவசக்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளிதரன், குணசீலன் ஆகியோரின் அன்பு மாமனும் நிவேதிகா, நிருசிகா, அஸ்ரின் ஆகியோரின் அன்புப் பேரனும் அம்பலவாணர், பறுவதத்தின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சன்னதி இல்லம்,*
*கைதடி கிழக்கு, கைதடி.*
T.P.: 0602213226 (சி-36325)(24-12-15-40)

தகவல்:
ச.வரதராசா (மருமகன்),
சாவகச்சேரி நகரசபை.

## தில்லையம்பலம் நடராசா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நடராசா 22.07.2004 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் தங்கவேற்பிள்ளை (பிரான்ஸ்), திலகவதி (மீசாலை), தலகேஸ்வரி (டென்மார்க்), சிவனேஸ்வரி (டென்மார்க்), சுசீலாதேவி (யா/மந்துவில் றோ.த.க.பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தாதேவி (பிரான்ஸ்), குணநாயகம், குமாரவேலு (டென்மார்க்), விஜயவரதன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் தனுஷன் (பிரான்ஸ்), விஷ்ணுகா, ராகவி (டென்மார்க்), தர்ஷனா, கவிநயா (வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவிகள்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் உதயனில் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

தகவல்:
தி.குணநாயகம்
(மருமகன்).
(34440)(34-12-15-40)

# ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி,ஜூலை25

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாள்வார் ஆச்சிரம வாராந்த ஆன்மீக சொற்பொழிவு வரிசையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு 'ஆழ்வார் பாசுரங்களில் தெய்வீகம்' என்னும் தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ப.செல்வநாயகம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.
(ஒ-78-173)

# திருக்குறள் மனனப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள திருக்குறள் மனனப் போட்டிக்கான விண்ணப்பம் யாழ்.கல்வி வலயத்தினால் கோரப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள் பற்றிய அறிவு குறைந்து செல்வதாகவும்-

இப்போட்டி மூலம் மாணவர்களிடையே திருககுறளின் பங்களிப்பை வளர்க்கவே இப்போட்டி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் - போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டியானது மூன்று பிரிவுகளாக நடததப்படவுள்ளது.

4ஆம், 5ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் கீழ்ப் பிரிவாகவும் -

தரம் 6 முதல் 9 வரையான மாணவர்கள் மத்திய பிரிவாகவும் -

தரம் 10 முதல் 13 வரையிலான மாணவர்கள மேற்பிரிவாகவும் வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் அதிகமான திருக்குறள்களை மனனஞ்செய்து ஒப்புவிப்போர் அடிப்படையில் முதல் மூன்று இடங்களிற்கும் மாணவர்கள தெரிவுசெய்யப்படுவர்.

இப்போட்டியானது நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம 30 ஆம் திகதிக்கு முன்னா 'திருக்குறள் மனனப் போட்டி அமைப்பாளர்', யாழ்.கல்வி வலயம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-6)

## வீடு விற்பனைக்கு

இல.15/8, ஓட்டுமடம் செபஸ்தியார் வீதியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதி களுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக் குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
த. கனகரத்தினம்,
இல. 234/6, செபஸ்ரியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(34447)(12-17-40)

## விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு:
விளம்பர இல:2331
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(31239)(21-19-11)

## தேவை

உணவுச்சாலையில் ரொட்டி தயாரிப்பவர், உணவு பரிமாறுவோர் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். தங்குமிட வசதி, சாப்பாடு வழங்கப்படும்.

தொடர்பு:
புளூராக்கன் ரெஸ்றோரன்ற்,
கண்டிவீதி,
சாவகச்சேரி.
(சி.36327)(12-17-40)

## விற்பனையாகின்றன!

**Audio CD**
★ வசூல் ராஜா **M.B.B.S**, காதல **F.M**, செல்லமே, கண்ணாடிப்பூக்கள, **4 Students**, அழகானவள், துள்ளல.
★ அன்புச் சகோதரன், சிங்காரச்சென்னை, நியூ (VCD).
★ கலக்கல் ரீமிக்ஸ (VCD).

*அத்துடன் பல்வேறு விதமான ஓடியோ, வீடியோ, MP3, சோகப்பாடல், ரீமிக்ஸ், சிங்கள, ஹிந்திப் பாடல், பொப்பாடல் **CD**களையும், பெற்றுக்கொள்ளலாம்.*

விற்பனை செய்யவிரும்பும் வியாபாரிகளுக்கு **VCD Player**இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0712511004, 021-4590692

*ஸ்ரீவிநாயகர்,*
*வழக்கம்பரை,*
*சுழிபுரம்,*
(34505)(43-17-12-40)

அக்சன் வீடியோ,
கே.கே.எஸ. வீத',
பூநாறிமரத்தடி,
யாழ்ப்பாணம்.

## வீதிப் பராமரிப்பு தொழிலாளர்கள் தேவை

துரித வீதிப் பராமரிப்பு வேலைகளை யாழ். மாவட்டத்தில் ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் 31ஆம் திகதி வரை மேற்கொள்வதற்காக தொழிலாளர்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் காரியாலயங்களில் சமயா சமய அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கீழே குறிப்பிட்ட காரியாலயங்களில் 02-08-2004 திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை நடைபெறவுள்ளது.

தொழிலாளர்களின் தரத்திற்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட வேதனம் வழங்கப்படும்.

**நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடங்கள்:**

01. நிறைவேற்றுப் பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
657, கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

02. நிறைவேற்றுப் பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மாலு சந்தி,
கரவெட்டி.

எந்திரி வே.தர்மகுலசிங்கம்
மாகாணப் பணிப்பாளர்/வ-கி (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.
(சி-36331)(21-12-17-40)

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினர்
**கபிரியேற்பிள்ளை ஆசீர்வாதம்**

அவர்களின் திடீர் மரணச் செய்தியைக் கேட்டு நாம் ஆறாத துயர் அடைந்திருக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
பண்டத்தரிப்பு /சில்லாலை புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்.
(34438)(24-40-12-17)

## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7282608 முதல் 7295173 வரை
சீட்டிழுப்பு இல. 52 திகதி 22-07-2004

வெற்றி எண்கள் **6 3 7 8 4 0** சுப்பர் எண் **15**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,32,53,125/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,32,53,125/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 5,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,101 | 500/- | 5,50,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,000 | 50/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,09,007 | 10/- | 10,90,070/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 1,000/- | 1,13,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,101 | 100/- | 1,10,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,898 | 20/- | 2,17,960/- |
| மொத்தம் | 1,33,352 | | 48,26,630/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 49,18,580/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,35,59,000/-**

தொடர் இல. 6320948 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 26 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7289033-8-01
7291178-5-50
7290104-4-87
7283525-2-87
7289779-8-47



சுவிற்ஸர்லாந்து கலாநிகேதன் நடனாலய மாணவிகள் வழங்கிய நாட்டியாஞ்சலி நிகழ்வு நேற்றுப் பிற்பகல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவிகள் வழங்கிய நடனக் காட்சிகளை முதலிரு படங்களிலும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட திருமதி பத்மின செல்வேந்திரகுமார், திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி கிருஷாந்தி ரவீந்திரா ஆகியோரை மூன்றாவது படத்திலும், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்தியக் கலைஞர் ஜாகீர் உசேன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் மகேந்திரன், நாட்டியவேள் வேல் ஆனந்தன் ஆகியோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள் : கவிதரன்).

## பல்கலை. மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவு 2 ஆயிரமாக உயர்த்தப்படும்

கொழும்பு, ஜுலை24

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் மகாபொல கொடுப்பனவுகளை கணிசமான அளவு அதிகரிப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இத்தகவலை வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

தற்போது பல்கலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஆயிரத்து 650 ரூபாவை 2 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாகவும், உயர் கலவிக்காக வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவுகளும் 650 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்தத் தொகையை 2 ஆயிரம் ரூபாவாக உயர்த்தும் நோக்கம் இருப்பதாகவும் அமைச்சர் சொன்னார். மாணவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா வழங்குவதும் கூட போதுமானதாக இருக்காது என்று கூறிய அமைச்சர் மேற் கொண்டும் இதனை அதிகரிக்க முயற்சி எடுக்கப்படும் என்றார்.

புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பவர்களின் குடும்பவருமானம் 12 ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் என்பதை 20 ஆயிரமாக உயர்த்தப்பட தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

(ப)

## சாரண ஆசிரியருக்குப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 24

யாழ்.மாவட்ட பெண் சாரணிய ஆசிரியர்களுககான பயிற்சி வகுப்புகள் மூன்று இடங்களில் நேற்று ஆரம்பமாகி நாளைவரை இடம்பெறவுள்ளன.

உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியார் மடம் பாடசாலை, யாழ்.கலவியியற் கல்லூரி ஆகிய இடங்களில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள சாரணிய பிரதம ஆணையாளர், பிரதி பிரதம ஆணையாளர் உள்ளிட்ட பத்துப்பேர் கொண்ட குழு இந்தப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

சாரணிய ஆசிரியர்கள், புதிதாக இணைய விரும்பும் ஆசிரியர்களும் பயிற்சியில் இணையலாம் என யாழ்.மாவட்ட சாரணிய ஆணையாளர் தெரிவித்தார்.

(எ-3)

## கலைவார நிகழ்வும் பரிசளிப்பும்

யாழ்.பல்கலைக் கழக கலைப் பீடதன் கலைவார இறுதி நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சி.வசீகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம் விருந்தனராக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினராகக் கலைப் பீடாதிபதி பேராசிரியா ப.கோபாலகிருஷ்ண ஐயரும் கலந்துகொளவுள்ளனர். கலை வார நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பதக்கங்கள் , சான்றிதழ்கள் என்பன வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர். பட்டிமன்றம், இசை நிகழ்வு உட்பட பல கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(4)

## ஊர்காவற்றுறையில் இன்று உள்ளூராட்சிவார கலை நிகழ்வு

ஊர்காவற்றுறை,ஜுலை24

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்திய பல்வேறு போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் கலைநிகழ்வுகளும் இன்று மாலை 7 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகமும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச கலாசார உத்தியோகத்தரும் கலந்துகொள்வர்.

கலை நிகழ்ச்சிகளாக தம்பாட்டி காந்திஜி நாடக மன்றம் வழங்கும் பண்டார வன்னியன் நாட்டுக்கூத்தும், மெலிஞ்சிமுனை கலைக் குரிசில் கலாமன்றம் வழங்கும் ஆனந்தசீலன் தென்மோடி நாட்டுக் கூத்தும் இடம்பெறவுள்ளன.

(எ-16)

## இரத்தவங்கியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜுலை24

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் இரத்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இரத்தவங்கி அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

உயிராபத்து மற்றும் அவசர நோயாளர்களை உயிராபத்தில் இருந்து மீட்கும் முகமாக பொதுமக்கள் தாமாக முன்வந்து இரத்த தானம் செய்து உதவவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

(எ-15)

## படுகாயமடைந்த வயோதிபர் ஆஸ்பத்திரியில் மரணம்

வீதிவிபத்தில் படுகாயமடைந்தார் என்று தெரிவித்து சுய நினைவிழந்த நிலையில் வயோதிபரொருவர் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் யாழ்.வைத்தியசாலையில் சேர்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார்.

இவரை வைத்திய சாலைக்கு எடுத்துச்சென்றவர்கள் வெளிநோயாளர் பிரிவல் அநாதரவாக விட்டுவிட்டுத் தலைமறைவாகிவிட்டனா என்று கூறப்படுகிறது.

பெயர் விவரம் தெரியாதநிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப் பட்ட இவர் நேற்று மாலை 6.30 மணியளவில் உயிரிழந்தார்.

சுமார் 70 வயது மதிக்கத்தக்க இந்நபரின் வலதுகையில் ஆர்.கே.என ஆங்கில எழுத்துக்கள் (R.K) பொறிக்கப்பட்ட பொன்னிறத்திலான மோதிரமும், இடது கையில் வெள்ளிமோதிரமும காணப்படுகிறது.

இதற்கமைய இவரின் உறவினர்களை வைத்தியசாலைக்கு வந்து சடலத்தை பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(4-15)

## அந்தியேட்டி அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் தாரண வருடம் ஆனி மாதம் 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த

அமரர்

**முருகேசு ஆறுமுகம் லோகநாதன்**

(இளைப்பாறிய பிராந்திய வன அதிகாரி)

தோற்றம் 14.06.1939 — மறைவு 20.06.2004

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் ஆடி மாதம் (24.07.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொளளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு,
நீர்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(34503)(11-18-36)


மானிப்பாய் பரிஷ்,
யாழ். மத்திய கல்லூரி
லியோ கழகங்கள் இணைந்து
நடத்தும்
மாபெரும் இலவச சுகாதார கருத்தரங்கும்
மருத்துவ பரிசோதனை முகாமும்
(சிகை அலங்கரிப்பாளர்களுக்கானது)

இடம் :- யாழ். மத்திய கல்லூரி
காலம் :- 25.07.2004
நேரம் :- காலை 9.00 (பு.நே.)

அனைத்து சிகை அலங்கரிப்பாளர்களையும் இந் நிகழ்வில் கலந்து பயன் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆய்வுகூட குருதிப் பரிசோதனைகளுக்கு அனுசரணை :-
Medi Quick (PVT) LTD
Jaffna

மானிப்பாய் பரிஷ், லியோ கழகம்.

விளம்பர அனுசரணை: :- ராஜன் சிகை அழககம் மானிப்பாய்.
(34508)(36-11-18)



லக்சுமி சினிமா இணுவில்
23.07.2004 முதல்
அர்வீந் - சோனா, யுகேஸ்வரன் - கருணாஸ்
ரகுவரன் தலைவாசல்விஜய் இன்னும் பலர் நடிப்பில்
கையோடு கை
(24511) புதிாநேரம்: 11.00, 3.00, 7.00

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



மானஸ்தன்
புதிாநேரம்: 10.30,2.30,6.30,9.30.
(சி-35994)

நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்மியா, விஜயகுமார், கர்ணாஸ் நடித்த
குத்து
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/357739) (36)

நிரஞ்சனாஸ் சங்கானை
பிரகாஸ்ராஜ், கலாபவன்மணி நடித்த
நாம்
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(ரீல்ஸ்) வெள்ளி, சனி, ஞாயிறு
Random Hearts இரவு 8.45 (பு.நே.)
(C-36291)(36)


## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை இராசையா (நடராசா)

(கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி ஆலய பரிபாலனசபை தர்மகர்த்தா)



கொக்குவில் கிழக்கு, புகையிரத வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசையா அவர்கள் 22.07.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் கமலாதேவி, ஸ்ரீ சண்முக வரதன், ஸ்ரீரங்கநாதன் (இங்கிலாந்து), உமா தேவி (ஜேர்மனி), பாரதிதேவி, ஸ்ரீரகுபதி (கனடா), வனஜாதேவி (கனடா), கிருஷ்ணதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் லீலாவதி, காலஞ்சென்ற துரைராசசிங்கம் மற்றும் சண்முகநாதன, இந்திரகுமார், ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும சு.அன்னலெட்சுமி அவர்களின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனககிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (34444)(11-18-36)

தகவல்:
- குடும்பத்தினர்.

### திருமதி நாகலிங்கம் மகேஸ்வரியம்மா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும கொண்ட திருமதி நாகலிங்கம் மகேஸவரியம்மா அவர்கள் 22.07.2004 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சுழிபுரம் பெரிய பரிகாரியாரின் பூட்டியும், காலஞ்சென்ற பிரபல வைத்தியர் வைரமுத்து சுப்பிரமணியம் (பெரியதம்பி - அன்னபூரணம் தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற சரவணமுத்து நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சரவணமுத்து, இராமநாதன், வெற்றிமாதேவி (பிரான்ஸ்), நாகபுஸ்பம் (ராணி), பரிபூரணம் (தேவி), நாகேஸ்வரி (வவி), ஆறுமுகசாமி ( ராசன், பலாலி ஆசிரியர் பயிற்சிக கலாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கமலபாரதி (கல்வித்திணைக்களம்), துரைராஜலிங்கம் (பிரான்ஸ்), சிவச்சந்திரன், சிவகாந்தா (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சேவ் பாடசாலை சேவை), மார்க்கண்டேயர், பத்மராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜசேகரம் (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரியும் குகசுரபி, ஜெயக்குமரேஸ், லிங்கேஸ், இலங்கேஸ்வரன் (மதன - பிரான்ஸ்), ஜெயப்பிரபு (பிரபு - பிரான்ஸ்), சுபாசினி (பிரான்ஸ்), காஞ்சனா, சிவறஞ்சன், தனுஜா, ஜிருசியா, கீர்த்திகா, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யதுர்சனாவின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, மார்க்கண்டு, துரையப்பா (நுவரெலியா), திருமதி அன்னபூரணம், செல்லத்துரை, திருமதி பரிபூரணம், திருமதி இராஜசேகரம் (மலேசியா) ஆகியோரது மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.07.2004) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று அவரின் குடும்ப மயானமான சுழிபுரம் திருவடிநிலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*பட்டினசபை வீதி,*
*சங்கானை* (34393)
TP.0777563763 (36-11-18)

தகவல்:-
பிள்ளைகள்,
மருமக்கள்

# கருணா - அனுரா விடயத்தால் நாடாளுமன்றில் நேற்றுச் சர்ச்சை

கருணா - அனுரா விவகாரத்தால் நேற்று நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

ஆளும் கட்சி உறுப்பினரான மேர்வின் சில்வாவே இந்தச் சர்ச்சையைக் கிளப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை பத்து மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடியது.

வழமையான வாய்மூல விடைக்கான கேள்விகள் எழுப்பப்பட்டபின், முன்னாள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான ரவி கருணாநாயக்க இலத்திரனியல் மூலம் வாக்களிக்கும் முறையை அறிமுகப்படுத்தும் திட்டம் ஒன்றைத் தனி நபர் பிரேரணையாகச் சபையில் சமர்ப்பித்தார். ஒவ்வொரு தேர்தல்களின்போதும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுவருகின்றன. அதைச் சட்டத்தாலும் தடுக்கமுடியவில்லை. கள்ள வாக்குப் போடுதல், வாக்குமோசடி செய்தல், ஆள் மாறாட்டம் செய்தல் போன்ற சட்டவிரோதச் செயல்கள் என்பன ஒவ்வொரு தேர்தல்களிலும் இடம்பெற்றே வருகின்றன. இன்றைய வாக்களிப்பு முறையின்படி இவற்றைத் தடுப்பது ஒரு சிரமமான காரியம்.

எனவே, இலத்திரனியல் மூலம் வாக்களிக்கும் முறையை இங்கு அறிமுகப்படுத்த வேண்டும் என பிரேரணை சமர்பித்துப் பேசிய ரவி கருணாநாக்க எம்.பி. குறிப்பிட்டார்.

இதனை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான காமினி ஜயவிக்கிரம பெரேரா வழிமொழிந்தார். இந்தப் பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்பட்டபோதும் ஆளும் கட்சியினரும் குறிப்பாக ஜே.வி.பியினரும் அதனை ஆதரித்தே பேசினர்.

ஆனால், வழமையாகவே எல்லா விடயங்களிலும் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசும் ஆளும் கட்சி உறுப்பினரான மேர்வின் சில்வா பிரேரணையுடன் சிறிதும் சம்பந்தமே இல்லாத விடயம் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட கருணாவை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றதாக ஐ.தே.க. ஆதரவுப் பத்திரியைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. இது அனுரா பண்டாரநாயக்காவின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஒரு விசமத்தனமான பிரசாரம் என்றார் அவர்.

பண்டாரநாக்க குடும்பம் ஏற்கனவே பல உயிர்களைத் தியாகம் செய்துள்ளது. ஜனாதிபதியின் தந்தை, ஜனாதிபதியின் கணவர் ஆகியோர் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர். ஜனாதிபதியையும் கொலைசெய்ய முனைந்தனர். இப்பொழுது அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவுக்கும் உயிராபத்தை ஏற்படுத்த திட்டமிட்டுச் செயல்படுகின்றனர் என ஆவேசத்துடன் பேசினார்.

இதனை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வன்மையாகக் கட்டித்தனர். எந்த ஒரு பத்திரிகையும் ஐ.தே.கவின் கட்டுப்பாட்டில் இல்லை. தேசியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிடுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான சிவாஜிலிங்கம் எம்.பியே கருணாவை அனுரா பண்டாரநாயக்காவே சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்று கூறினார். கருணா வழமையான பிரயாணிகள் வழியாகவோ அல்லது விசேட விருந்தினர்கள் வழியாகவோ விமான நிலையத்துக்குள் செல்லவில்லை.

பாதுகாப்பான பிறிதொரு வழியாகவே அரச படையைச் சேர்ந்த இரண்டு மெய்காவலர்களின் பாதுகாப்பிலேயே கருணா குடும்பம் அழைத்துச் செல்லப்பட்டது என இந்த நாடாளுமன்றத்தில் அவர் பகிரங்கமாகவே கூறினார்.

அதைத்தான் தேசியப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இச் செய்திக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆளும் கட்சி உறுப்பினர் மேர்வின் சில்வாவின் கூற்று சிறிதும் நம்பகத்தன்மையற்றது என எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் பதிலளித்தனர்.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் பலத்த கருத்து மோதல்கள் இடம்பெற்றன. சபையில் அமைதி குலைந்தது. அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் பெரிதும் சிரமப்பட வேண்டியதாகிவிட்டது.

இந்தச் சர்ச்சை சபையில் இடம்பெற்ற வேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாடாளுமன்றக் குழு அறையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திக்கொண்டிருந்தனர். இதனால் இந்த விடயத்தில் விளக்கமளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

மேலும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்கும்போது அரச காணி, நிர்வாகம் தொடர்பான ஒரு சர்ச்சையும் சபையில் கிளப்பப்பட்டது.

ஜனாதிபதி, இடைக்காலத் நிர்வாகம் தொடர்பாகப் புலிகளுடன் பேசுவதாகக் கூறியுள்ளார். அப்படி இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகம் வழங்கப்படும் போது காணி நிர்வாகம் இந்த இடைக்கால சபையிடம் ஒப்படைக்கப்படுமா என ரவிகருணாநாயக்க எம்.பி.விவசாயகால நடை அபிவிருத்தி அமைச்சர் அனுர குமார திஸாநாயக்கவிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அரச காணிகளில் ஓர் அங்குலம் கூட புலிகளிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. அதற்கு இடமளிக்கவும் மாட்டோம் என அமைச்சர் அனுர குமார திஸாநாயக்கா பதில் அளித்தார். (க)

## தராகியின் வீட்டின் மீது மீண்டும் பொலீஸார் பாய்ச்சல்!

### நள்ளிரவுத் தொல்லை தொடர்கிறது

பிரபல அரசியல், இராணுவ விமர்சகர் சிவராமின் (தராகியின்) தெஹிவளை வீடு இரண்டாவது தடவையாகவும் நேற்று அதிகாலை பொலீஸாரின் தேடுதலுக்கு உள்ளானது.

இம்முறை தராகியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஒருவரும், பிரபல சிங்கப் பத்திரிகையாளர் ஒருவரும் வீட்டில் இருந்த சமயம் பொலீஸார் பலவந்தமாகப் புகுந்து தேடுதலை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு தாண்டி அதிகாலை ஒரு மணியளவில் கல்கிஸை பொலீஸ் நிலையத்திலிருந்து அதன் பொறுப்பதிகாரி தலைமையில் வந்த பொலீஸ் குழுவே இந்த அதிரடிப்பாய்ச்சலை நடத்தியது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரக நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய ஊடகவியலாளர் சிவராமும், அவரது நண்பர்களான 'சண்டே ரைம்ஸ்' கட்டுரையாளர் ராஜ்பல் அத்தநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியும், முன்னாள் ஊடகவியலாளருமான ஜெயானந்த மூர்த்தி ஆகியோரும் சிவராம் வீட்டிலிருந்து அச்சமயம் உரையாடிக்கொண்டிருந்தனர்.

திடீரெனப் புகுந்த பொலீஸார் வீட்டைச் சோதனையிட முற்பட்டனர். வீட்டைச் சோதனையிடுவதற்கான நீதிமன்ற உத்தரவு உள்ளதா என்று பொலீஸாரிடம் ஊடகவியலாளர் ராஜ்பல் கேட்டார்.

ஆனால், அத்தகைய உத்தரவின்றியே தம்மால் தேடுதலை நடத்த முடியும் என்று அதிகாரத்தோடு பதிலளித்த பொலீஸார் தேடுதலை நடத்த முற்பட்டனர்.

வீட்டில் அச்சமயம் இருப்பவர் ஓர் எம்.பி. என்றும், அவ்வேளை, இவ்வாறு தேடுதல் நடத்த முற்படுவது எம்.பியின் சிறப்புரிமையை மீறும் செயல் என்றும் பொலீஸாருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால், அவை எவற்றையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், தூங்கிக்கொண்டிருந்த சிவராமின் மனைவி இருந்த அறை உட்பட வட்டின் அனைத்து இடங்களுக்குள்ளும் புகுந்து பொலீஸார் தேடுதல் நடத்தினர்.

அச்சமயம் வீட்டில் ஆயுதங்களுடன் இருந்தவர்கள் என்று குறிப்பிட்டு இரண்டுபேரைப் பொலீஸார் கண்டுபிடித்தனர். ஆனால். அவர்கள் இரவரும் ஜெயானந்தமூர்த்தி எம்.பிக்குப் பாதுகாப்பாக வந்த - அவரது மெய்ப்பாது காவலர்களான - இரு பொலீஸார் என்பதும், கடமையின் நிமித்தம் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களையே அவர்கள் வைத்திருந்தனர் என்பதும் தெரியவர, தேடுதல் நடத்திய பொலீஸார் அசடுவழியத் திரும்பினர்.

இதற்கு முன்னரும் - சர்வதேச பத்திரிகையாளர் தினத்தன்று - சிவராம் தமது வீட்டில் இல்லாத சமயம் அவரது வீடு பொலீஸ் தேடுதலுக்கு இலக்கானது. நள்ளிரவு வேளை சிவராமின் மனைவி, குடும்பத்தவர்கள் தனித்திருந்த சமயம் அப்போது பொலீஸார் புகுந்து தேடுதல் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## இந்தியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவருக்கும் இந்தப்படைப்பிரிவைச் சேர்ந்த விசேட அணியினரே பாதுகாப்பு வழங்குகின்றனர்.

இன்னும் சில வாரங்களில் இந்தியாவின் கறுப்புப் பூனைப்படைப் பிரிவின் பயிற்சி அதிகாரிகள் இலங்கைக்கு வரவுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (க)

## வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. இதேவேளை, கடத்தப்பட்ட வங்கி அலுவ லரிடமிருந்து திறப்புக் கோர்வை பறிமுதல் செய்யப்பட்டு வங்கியின் கதவுகள் திறக்கப்பட்டு அவற்றின் பூட்டுக்களும் திறப்புக்களும் வெளியே வசப்பட்டு இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும் வங்கியினுள் எந்தப் பொருள்களும் திருட்டுப் போகவில்லை என பொலீஸாரின் விசாரணைகள்மூலம் தெரிய வந்திருப்பதாக பொலீஸ் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. கடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் காசாளர் எங்குள்ளார் என்பது நேற்றுமாலை வரை தெரியவரவில்லை.

மானிப்பாய் பொலீஸார் வங்கி அலுவலர்களை விசாரணை செய்து வருவதுடன் வங்கிக்கு பூரண பாதுகாப்பையும் வழங்கி வருகின்றனர்.

இதற்கிடையில் - மேற்படி சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் மு.சிவபாதவிருதயர்-

வங்கியின் கதவுப் பூட்டு உடைக்கப்பட்டுள்ளது. எனினும், எந்தவிதமாக பொருள்களோ, பணமோ அங்கிருந்து திருடப்படவிலலை. வங்கி ஊழியர் ஒருவர் காணாமற்போயுள்ளார். அவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி நடைபெறுகின்றது என்றார். (எ-185)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்

ஆரம்பம்

3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு

BERN, ZURICH

ஆகிய பெரு நகரங்களில்

லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்

தொடர்பு: 062 7974164 - 079 3344733

4665, OFTRINGEN, SWISS.

(33927)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுக்காலை 10 மணிக்குப் புளியங்கண்டலடி, கதிரவெளியில் வைத்து சீனித்தம்பி மகாலிங்கம் என்னும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

எமது தேசியத்தைப் பாழடையச்செய்யும் நோக்குடன் செயற்படும் இத்தேசவிரோத சக்திகளை மக்கள் இனங்கண்டு, இவர்களை எம் மத்தியில் இருந்து வெளியேற்ற தேசியத்தில் பற்றுள்ள அனைவரினதும் தலையாய கடப்பாடாகும் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்துகின்றனர்.

அத்துடன், இக்கொடூர துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியானவரின் குடும்பத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றனர் - என்றுள்ளது. (எ-3-14)

A/L - 2006

பிரத்தியேக வகுப்பு

இணைந்த கணிதம்

ந.அம்பி

2006 மாணவர்களுக்கு

ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

*2005 Paper Class*

*ஆரம்பம்: 01-08-2004*

பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/18, ஸ்ரான்லி வீதி,

(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். (சி-36067)

## நாளைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனங்களைப் பூட்டிக், கறுப்புக் கொடிகளை கடைவாசல்களில் பறக்க விட்டு, தமிழ் மக்களின் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்த வேண்டும் என யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் வேண்டி நிற்கின்றது.

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4)

## இடைக்காலத் தன்னாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஒரு சக்தியாலும் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழ்த் தாயகக் கோட்பாட்டை அழித்துவிடமுடியாது. 1957ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந் தத்திலும், 1967இல் செய்து கொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய தயாகக் கோட்பாடு 50 வருடங்களுக்கு மேல் பழைமையானது. இது ஒன்றும் புதியதல்ல.

அண்மைக் காலங்களில் சிறுசிறு நிகழ்வுகளால் பதற்றம் ஏற்பட்டிருந்தபோதும், இன்று எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுக்கும் இடமில்லை.

தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையிலான தேசியத் தமிழ்த தாயகத்தை மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் ஏகமனதாக அங்கீகரித்துவிட்டனர். எமக்குள் வடக்கு - கிழக்கு என்ற பேதம் இல்லை.

பிரித்தாள முயலும் அரசும், அதன் கைக்கூலிகளும் வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கிடையில் ஐக்கியம் இல்லை; நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதில் எந்த உண்மையும் இல்லை என்பதை வெளிப்படையாகத் தென்பகுதி இனவாத அரசியல்வாதிகளுக்கும், தமிழ்த் தேசியத்தை விரும்பாத துரோகக் கும்பல்களுக்கும் தெளிவுபடுத்துவதற்காகவே இன்று ஒரே மேசையில் தோன்றி எமது உறுதித் தன்மையை வெளிப்படுத்துகின்றோம்.

- இப்படி மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்கள் அங்கு தெட்டத்தெளிவாகக் கூறினர்.

கிழக்கு மாகாணத் தாய்மார் தமிழ்த் தேசியத்திற்காகவே தலைவர் பிரபாகரனிடம் வீட்டுக்கு ஒரு பிள்ளையை ஒப்படைத்தனர். பிரதேசவாதத்தைத் தூண்டும் துரோகிகளுக்கு அல்ல என்பதை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது மக்கள் தீர்ப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். வடக்கையும், கிழக்கையும் எந்தச் சக்தியாலும் பிரிக்கமுடியாது; பிரிக்கவும் விடமாட்டோம். இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சூளுரைத்தனர். (க)

## ரீ.எம்.சௌந்தரராஜன் வைத்தியசாலையில்

பிரபல பின்னணிப்பாடகர் ரீ.எம்.சௌந்தராஜன் திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதன் காரணமாக மதுரை அப்பல்லோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு மேற்படி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் இணையத்தளம் ஒன்று நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.

## புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கோடு இக்கருத்துக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் எனும் "பொடா" சட்டத்தை இந்திய மத்திய அரசு நீக்க வேண்டும் என்பதை 61 வீதமான மக்கள் வரவேற்றுள்ளனர். அவர்களில் 15 வீதமானோர் பயங்கரவாதச் செயல்களைக் கையாளும் விதத்தில் தற்போதைய சாதாரண சட்டங்களை வலுப்படுத்த வேண்டும் என்றும் கோரினர். (க)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பதில் இரு தரப்பினரும் தொடர்ந்து செயற்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் சில வாரங்களுக்கு முன்னர் புல்மோட்டையில் சென்ற இராணுவத்தினரால் தடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் பேசப்பட்டது. புலிகள் அமைப்பைச் சேர்ந்த உயர்மட்ட உறுப்பினர்கள் அண்மைக்காலத்தில் புல்மோட்டை சென்றமை புதிய விடயம் எனவும், இதன் விளைவாகவே, அங்கு நின்ற படையினர் தலைமை அதிகாரியிடம் பேசும் வகையிலேயே எழிலனைத் தடுத்தனர் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாதெனவும் இராணுவ அதிகாரி தெரிவித்தார் என்று கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (4-7)

## அரசுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் எதிர்பாராத இரண்டு முக்கிய அமைச்சுக்கள் இ.தொ.காவுக்கு பரிசாகக் கிடைக்கவிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் இரவு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமானை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அழைத்துச் சென்றார் எனத் தெரிகின்றது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் ஜனாதிபதியுடன் நடந்த கலந்துரையாடலின் பின்னர் இரு அமைச்சுக்களை இ.தொ.காவுக்கு விட்டுக் கொடுக்க ஜனாதிபதி இணங்கினாராம்.

இந்த இணக்கத்தைத் தொடர்ந்து அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் எனத் திட்டவட்டமான உறுதி அரசுத் தரப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக இ.தொ.கா. வட்டாரங்கள் கருத்துக் கூற மறுத்து விட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடந்த வாரம் சந்தித்து உரையாடிய இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மலையகத்துக்கு சேவையாற்றக்கூடிய வகையில் அமைச்சுப் பொறுப்புக்கள் தமது தரப்புக்குக் கிடைத்தால் தாம் அரசின் பக்கம் சேருவர் என ரணில் விக்கிரமசிங்கவிடம் அவர் கோடி காட்டியிருந்தார் என இ.தொ.கா. வட்டாரங்கள் ஏலவே தெரிவித் திருந்தன.

இதேசமயம்:-

இ.தொ.கா தலைமையிலான புதிய தீர்மானத்தை அடுத்து, கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று மூடிய அறைக்குள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. (க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.